மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/3063/2007
ஆணையாளர் அவர்களின் 16.11.2007 நாளிட்ட குறிப்பு

## 28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.586/2007 பொருள் எண்.34

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு**

டாக்டர் திருமதி.பி.எஸ்.சித்ரகலா, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் கீழ்கண்டுள்ளபடி பணியமர்ந்து பதவி உயர்வு பெற்றுள்ளார். அன்னாரின் பிறந்த தேதி 01.12.49, வயது முதிர்வு ஓய்வு நாள்.30.11.2007.

| வ. எண். | பதவியின் பெயர் | பணி நியமன நாள் | உறுதியாக்கம் செய்யப்பட்டநாள். ஆணை எண். | தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள் ஆணை எண். |
|---|---|---|---|---|
| 01 | உதவி மருத்துவ அலுவலர் | 04.01.75 | 04.01.75 சி.அ.மன்றத்தீர்மான எண்.164/76,நாள்.25.02.76 அ.ஆ.எம்.எஸ்.எண்.915, சு.ம.கு.ந.து. நாள்.17.04.76 | 04.01.77 சி.அ. மன்றத்தீர்மான எண்.432/77, நாள்.06.05.77 (ம) 910/77, நாள்.08.12.77 அ.ஆ.எண்.323, சு.ம. கு.நீ.வ.துறை. நாள்.16.02.77 |
| 02 | மண்டல அலுவலர் | 16.12.2004 | 16.12.2004 அ.ஆ. எம்.எஸ். எண்.225, ந.நி.ம.கு.நீ.வ.துறை, நாள்.20.06.2006 ஆணையர் செ.மு ஆணை எண்.மா.கு.ந. எப்.4/553/01, நாள்.28.09.2006. ம.தீ. எண். 376/06, நாள்.31.08.2006 | -- |
| 03 | மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் | 06.06.2007 | 06.06.2007 மன்றத்தீர்மான எண்.205/07, நாள்.28.05.2007 அ.ஆ.(ப) எண்.471, ந.நி.ம.கு.நீ.வ.(மாந3) துறை, நாள்.08.10.07 | -- |

டாக்டர் திருமதி.பி.எஸ்.சித்ரகலா, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்கள் மீது நாளது தேதி வரையில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 14.08.2007 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை.

தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை, தனியரின் பணிப்பதிவேடு அவருக்கு மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் அரசின் உறுதியாக்கம் பெற நடவடிக்கையில் இருந்ததால் உள்ளாட்சி தணிக்கையின் முன்தணிக்கை செய்ய அனுப்ப இயலவில்லை. தற்பொழுது தணிக்கைக்கு அனுப்பி முன்தணிக்கை பெற காலஅவகாசம் இல்லை. இவரை தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி பண இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. நடப்பு நிதியாண்டில் தணிக்கை பத்தி தணிக்கையிலிருந்து பெறவில்லை.

இதன் பொருட்டு அன்னாருக்கு அனுமதிக்கப்பட்டு பணிக்கொடை தொகை 25% தொகை நிறுத்தி வைக்கப்படும். இவரது நியமனம் ஊதியம் (ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் பண இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. இவர் சென்னை மாநகராட்சிஅலுவலர் கூட்டுறவு சங்கத்தில் கடன்

<u>மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/3063/2007</u>

ஏதும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி 1–B நிலை எனவே இவரை பணியிலிருந்து விடுவிக்க நியமன குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

எனவே, டாக்டர் திருமதி.பி.எஸ்.சித்ரகலா, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு தொகை இழப்பீடு மற்றும் தனிப்பட்ட / அலுவலக நீண்ட கால முன்பணம் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 30.11.2007 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**ம.க.கு. எண். அ2 / 3756 /2007**
**ஆணையாளர் அவர்களின் 14.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.587/2007 பொருள் எண்.35

**பணியமைப்பு –வயது முதிர்வு ஓய்வு**

திரு. கே. நம்மாள்வார், தலைமை கணக்கு அலுவலர் (வ/செ) அவர்கள் 31.12.2007 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வுபெற உள்ளார். திரு. கே. நம்மாள்வார் வகிக்கும் தலைமை கணக்கு அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியில் வகுப்பு 1 A ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, அவ்வலுவலரை வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்க அரசின் உத்தரவு பெறவேண்டும்.

திரு. கே. நம்மாள்வார், தலைமை கணக்கு அலுவலர் ( வ/செ) சென்னை மாநகராட்சி பணியில் 15.05.1968அன்று பணியை துவக்கி 23.3.1979 அன்று மேல்நிலை எழுத்தராகவும், 7.3.96 அன்று மேலாளராகவும் 12.12.96 அன்று மொழிப்பெயர்ப்பு கண்காணிப்பாளராகவும், 1.8.97 அன்று நிர்வாக அலுவலராகவும், 26.12.2001 அன்று உதவி கணக்கு அலுவலராகவும், 8.9.2007 அன்று அரசின் உத்தரவுப்படி தலைமை கணக்கு அலுவலராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அரசாணை பல்வகை எண்.525 ந.நி.ம.கு.வ.துறை நாள்.29.12.2006ல் திரு. கே. நம்மாள்வார் அவர்களுக்கு தற்காலிகமாக உதவி கணக்கு அலுவலராக வழங்கப்பட்ட நியமனம் 26.12.2001 முதல் உறுதியாக்கம் செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அன்னாரது தலைமை கணக்கு அலுவலர் பதவியின் நியமனம் அரசால் முறைப்படுத்தி உத்தரவு பிறப்பிக்க வேண்டியுள்ளது.

ஓய்வு பெற உள்ள அலுவலரின் மீது துறை நடவடிக்கை ஏதும் நிலுவையில் மற்றும் ஆய்வில் இல்லை.

திரு. கே. நம்மாள்வார், தலைமை கணக்கு அலுவலர் ( வ/செ) உதவியாளராக மழைநீர் வடிகால் துறையில் பணிபுரிந்தபோது, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்த அடுக்குமாடி குடியிருப்பை வாங்குவதற்காக ரூ.19500/– முன்பணமாக அனுமதிக்கப்பட்டது. முன்பணத்திற்கான தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. ஓய்வு பெறும் அலுவலர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ஏதுமில்லை. மேலும் அன்னார் தனிப்பட்ட முறையில் பெற்ற கடன் தொகைக்கு பிடித்தம் செய்ய வேண்டிய தொகை ஏதுமில்லை. திரு. கே. நம்மாள்வார், தலைமை கணக்கு அலுவலர் (வ/செ) அவர்களை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க தடை ஏதும் இல்லை.

எனவே, திரு. கே. நம்மாள்வார், தலைமை கணக்கு அலுவலர் ( வரவு மற்றும் செலவு) அவர்களை 31.12.2007 அன்று பிற்பகல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்க அரசினை கோர நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.எண்.பி4/23559/07**
**ஆணையாளர் அவர்களின் 14.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.588/2007 பொருள் எண்.36

**ஓய்வூதியம்**

திரு.இ.கிருஷ்ணன், கூடுதல் வருவாய் அலுவலர், வருவாய்துறை, அவர்கள் கடந்த 30.11.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.2983/எ4/2007, நாள்.08.10.2007ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.9000/– 01.12.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.7609/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.3,50,000/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3,13,038/– நேர்செய்து மீதம் தொகை ரூ.36,962/–ல் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.9241/– போக மீதம் ரூ.27,721/– வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.3,76,560/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3,18,319/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.58,241/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.கே.புஷ்பா, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.5400/– 04.11.2013 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 08.10.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.12.2006 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இப்பொருளின் பத்தி எண்.4ல் "இரண்டாம் வகுப்பு அலுவலர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை "வகுப்பு 1(பி) அலுவலர்" என்ற திருத்தத்துடன் இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>பொ.து.ந.க.எண்.பி4/23208/2007</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 24.10.2007 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண்.589/2007 பொருள் எண்.37

**<u>ஓய்வூதியம்</u>**

சென்னை மாநகராட்சி, மின்துறையில் கோட்ட மின் பொறியாளராக பணிபுரிந்து 31.07.2007 பி.ப அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.எஸ்.நாராயணராஜா, என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்று எண்.2732/எ4/2007, நாள்.26.07.2007ல் வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.08.2007 முதல் மாதம் | ரூ.9694 |
| இறப்பு மற்றும் பணிக்கொடை | ரூ.3,50,000/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.3231/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.6463/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.4,05,556/– |
| குடும்ப ஓய்வூதியம் அன்னாரின் மனைவி திருமதி.ஜெ.அனுராதா அவர்களுக்கு | ரூ.9694/– 31.07.2014 வரை<br>ரூ.5817/– 01.08.2014 முதல் |

சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் தணிக்கைத்தடைக்காரணமாக பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25 விழுக்காடு பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிகைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ.87,500/– |

தணிக்கைத் தடைக்காரணமாக பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை தனியர் மீது தணிக்கை தடைகள் நிவர்த்தி செய்த பின்னர் மீள வழங்கவும்

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/22360/07**
**ஆணையாளர் அவர்களின் 26.10.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.590/2007 பொருள் எண்.38

**ஓய்வூதியம்**

டாக்டர் திருமதி.எஸ்.மனோன்மணி, மருத்துவ அலுவலராக மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்து 30.11.2005 அன்று பிற்பகல் வயது முதிர்வு காரணமாக பணி ஓய்வளித்து மாமன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு பின்னர் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்ப்பாணை பெறப்பட்டது. தணிக்கை துறை குறிப்புரையில் இவர் பட்ட படிப்பு பயின்ற காலத்தினை வரன்முறைப்படுத்தப்பட்ட விவரம் மற்றும் ஓராண்டுக்கு மேலாக விடுப்பு காலத்திற்கான நடவடிக்கை குறித்து கேட்கப்பட்ட விவரங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுவந்த நிலையில் தனியர், தனது 16.07.2007 நாளிட்ட கடிதத்தில் தனக்கு தற்காலிக ஓய்வூதியம் அனுமதித்து தரும்படி வேண்டியுள்ளார்.

இது குறித்து சமர்ப்பித்துக் கொள்வது யாதெனில், தனியர் கடிதத்தில் கேட்டுள்ளபடி தற்காலிக ஓய்வூதிய பயன்களை ஓய்வூதிய விதி 66 (6)ன் படி அனுமதித்து வழங்கலாம்.

மேலும் தனியரை பொருட்படுத்தி தணிக்கை தடைகள் (ம) ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் இல்லை. தனியரை கூட்டு / தனிப்பட்ட முறையிலும் பொருட்படுத்தி பண இழப்பீடு ஏதும் இல்லை. எனவே, தற்காலிக ஓய்வூதியம் மட்டும் அனுமதித்து வழங்கலாம். கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகை திட்டம்–5 அவர்களின் ஓய்வூதிய கணக்கீட்டு தாளின்படி முழு ஓய்வூதியம் ரூ.3779/– இதில் 75% தற்காலிக ஓய்வூதியமாக ரூ.2843/–ஐ 01.12.2005 முதல் கணக்கிட்டு கணக்கு அலுவலர் ப.க.கு/இ.ம.தொ.தி–5 அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, 30.11.2005 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் சென்ற மருத்துவ அலுவலர், டாக்டர் திருமதி.எஸ்.மனோன்மணி அவர்களுக்கு 01.12.2005 முதல் 75% தற்காலிக ஓய்வூதியம் மட்டும் 2834/– வழங்க நியமனக்குழு மூலம் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி13/22632/2007</u>
<u>ஆணையாளர் அவர்களின் 17.10.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.591/2007 பொருள் எண்.39

<u>ஓய்வூதியம்</u>

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்–6ல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து 31.07.2006 அன்று பிற்பகல் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற டாக்டர் திரு.ஐ.வேலுச்சாமி, என்பவருக்கு கீழ்க்கண்டவாறு ஓய்வூதியப் பயன்கள் வழங்க உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் கடிதம் எண்.1810/எ4/2007, நாள்.09.08.2007ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஓய்வூதியம் 01.08.2006 முதல் மாதம் | = | ரூ. 7235/– |
| மாதத் தொகுப்புத் தொகை | = | ரூ. 2411/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | = | ரூ. 4824/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | = | ரூ. 302629/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடை | = | ரூ. 293000/– |
| குடும்ப ஓய்வூதியம் | = | பின்னர் தீர்மானிக்கப்படும். |

24 வருடங்கள் 11 மாதங்கள் 27 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்க்கண்ட தொகைகள் பிடித்தம் செய்யப்படவேண்டியுள்ளது.
25 விழுக்காடு பணிக்கொடைத் தொகையிலிருந்து
தணிக்கை தடைகள் நிவர்த்திக்காக. – ரூ.73250/–

<u>இறுதி ஊதியச் சான்றின்படி</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | மிகை ஊதியம் | = | ரூ. 4454/– |
| 2. | நீதிமன்ற பிடித்தம் தொகை | = | ரூ.155619/– |
| 3. | நீதிமன்ற ஆணையின்படி ரூ.200148/–க்கு 6 சதவீத வட்டி 28.10.2003 முதல் 31.05.2007 வரை | = | ரூ.43166/– |
| 4. | 01.06.2007 முதல் 31.10.2007 வரை வட்டி | = | ரூ.5004/– |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதிய பயன்கள் வழங்கப்படவேண்டும்.

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை சான்றின்படி ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/14665/2007**
**ஆணையாளர் அவர்களின் 15.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.592/2007 பொருள் எண்.40

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி வருவாய்துறை, மண்டலம்–7ல் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து 28.02.2006 பி.ப வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு. டி.ஜெ.சூரியநாராயணராவ், அவர்களுக்கு 07.06.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி ஓய்வூதியப் பயன்கள் வழங்க மன்றத் தீர்மான எண்.352/2007, நாள்.30.07.2007 மூலம் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்கண்ட மன்றத் தீர்மானத்தில் தனியரின் பணிக்கொடை ரூ.2,70,848/–ல் தணிக்கைத் தடை காரணமாக 25% பிடித்தம் ரூ.67,712/– என்பதற்கு பதிலாக ரூ.80,945/– என தவறுதலாக மன்றத்திற்கு வரையப்பட்ட குறிப்பில் தட்டச்சு செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் தனியரின் நிலையினை கருத்தில் கொண்டு அன்னாருக்கு தணிக்கைச்சான்றின்படி பணிக்கொடை ரூ.2,70,848/–ல் 25% பிடித்தம் ரூ.67,712/– மற்றும் மிகை ஊதியம் ரூ.13,233/– போக மீதம் ரூ.1,89,903/– மற்றும் இதர ஓய்வூதியப்பயன்கள் வழங்கவும் பின்னர் மன்றத் தீர்மானத்தில் உரிய திருத்தம் மேற்கொள்ளவும் ஆணையரின் அனுமதி பெறப்பட்டது.

எனவே, 28.02.2006 பி.ப. வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.டி.ஜெ.சூரியநாராயணராவ், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–7, அவர்களுக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்க அனுமதிக்கப்பட்ட மேற்கண்ட மன்றத் தீர்மானத்தில் பணிக்கொடை தொகை ரூ.2,70,848/–ல் 25% பிடித்தம் ரூ.80,945/– என்பதற்கு பதிலாக ரூ.67,712/– என உரிய திருத்தம் வேண்டி நியமனக்குழு மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/23690/2007**
**ஆணையாளர் அவர்களின் 16.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.593/2007 பொருள் எண்.41

**ஓய்வூதியம்**

திரு.ஜெ.சீனிவாசன், உதவி வருவாய் அலுவலர், வருவாய்துறை, அவர்கள் கடந்த 30.09.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.2549/எ4/2007, நாள்.10.10.2007ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.7650/– 01.10.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.7444/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.3,25,661/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,97,231/– நேர்செய்து மீதம் தொகை ரூ.28,430/–ல் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.7108/– போக மீதம் ரூ.21,322/– வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.3,20,076/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3,11,416/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.8,660/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.எஸ்.பானுமதி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.4590/– 02.09.2013 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 10.10.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.10.2006 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/23475/2007**
**ஆணையாளர் அவர்களின் 15.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.594/2007 பொருள் எண்.42

**ஓய்வூதியம்**

திரு.ப.சேஷாசலம், கோட்ட மின் பொறியாளர், மின்துறை, அவர்கள் கடந்த 30.06.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.2915/எ4/2007, நாள்.08.10.2007ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.9938/– 01.07.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.9488/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.4,15,723/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3,96,895/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.18,828/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.சே.பிரேமலதா, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.5963/– 01.07.2013 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 08.10.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.07.2006 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/14712/2007**
**ஆணையாளர் அவர்களின் 16.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.595/2007 பொருள் எண்.43

**ஒய்வூதியம்**

திரு.ஜெ.முனிராஜ், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–3, அவர்கள் கடந்த 31.03.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.0718/எ4/2007, நாள்.19.04.2007ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.6887/– 01.04.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.4592/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.2,87,727/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,58,324/– நேர்செய்து மீதம் தொகை ரூ.29,403/–ல் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.7351/– போக மீதம் ரூ.22,052/– வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.2,88,069/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,92,046/– ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.96,023/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.ராஜேஸ்வரி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.4219/– 12.03.2013 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 19.04.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.04.2006 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/23808/2007**
**ஆணையாளர் அவர்களின் 16.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.596/2007 பொருள் எண்.44

**ஓய்வூதியம்**

திரு.கோ.கோவிந்தராஜன், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–8, அவர்கள் கடந்த 31.01.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.3194/எ4/2007, நாள்.22.10.2007ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.7650/– 01.02.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.5100/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.3,13,038/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,81,061/– நேர்செய்து மீதம் தொகை ரூ.31,977/–ல் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.7995/– போக மீதம் ரூ.23,982/– வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.3,20,076/– ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,13,384/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.1,06,692/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.சரஸ்வதி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.4950/– 02.01.2013 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 22.10.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.02.2006 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>பொ.து.ந.க.எண்.பி4/23809/2007</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 16.11.2007 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண்.597/2007 பொருள் எண்.45

**<u>ஓய்வூதியம்</u>**

திரு.வி.குப்புசாமி, உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–6, அவர்கள் கடந்த 30.11.2005 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.3186/எ4/2007, நாள்.22.10.2007ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.4688/– 01.12.2005 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.4578/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.1,96,188/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,91,544/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.4,644/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.கே.லட்சுமி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.2813/– 10.11.2012 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 22.10.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.12.2005 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/23807/2007**
**ஆணையாளர் அவர்களின் 16.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.598/2007 பொருள் எண்.46

**ஒய்வூதியம்**

திருமதி.என்.ஜி.விஜயலட்சுமி, கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம், அவர்கள் கடந்த 31.08.2004 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஒய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.3187/எ4/2007, நாள்.22.10.2007ல் திருத்திய ஒய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஒய்வூதியம் ரூ.4825/– 01.09.2004 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒய்வூதியம் தொகை ரூ.4606/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.2,41,668/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,35,589/– நேர்செய்து மீதம் தொகை ரூ.6079/–ல் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.1520/– போக மீதம் ரூ.4559/– வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.2,01,836/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,92,674/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.9,162/–ஐ வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஒய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 22.10.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.09.2004 முதல் தனியருக்கு திருத்திய ஒய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/23806/2007**
**ஆணையாளர் அவர்களின் 16.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.599/2007 பொருள் எண்.47

**ஓய்வூதியம்**

திரு.எஸ்.ஐ.ஏ.ஆசிப்அலி, உதவி வருவாய் அலுவலர், வருவாய்துறை, அவர்கள் கடந்த 31.07.2004 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.3192/எ4/2007, நாள்.22.10.2007ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.4413/– 01.08.2004 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.4189/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.1,84,640/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,75,226/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.9414/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.எம்.ஏ.எஸ்.இ.முசாலிமாள், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.2648/– 18.07.2011 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 22.10.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.08.2004 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>பொ.து.ந.க.எண்.பி4/23556/2007</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 15.11.2007 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண்.600/2007 பொருள் எண்.48

**<u>ஓய்வூதியம்</u>**

திருமதி.கே.எம்.பொன்மணி ஏஞ்சலா, கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம், அவர்கள் கடந்த 31.05.2004 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.2319/எ4/2007, நாள்.05.10.2007ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.5238/– 01.06.2004 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.4740/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.2,19,158/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,98,322/–ஐ நேர் செய்து மீதம் தொகையான ரூ.20836/–ஐ வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது கணவர். திரு.பி.டி.அந்தோணி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.3143/– 01.06.2011 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 05.10.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.06.2004 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/23788/07**
**ஆணையாளர் அவர்களின் 15.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.601/2007 பொருள் எண்.49

**ஒய்வூதியம்**

திருமதி.டாக்டர் என்.ராஜம், மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நல துறை அவர்கள் கடந்த 28.6.2003 பி.ப முதல் தன் விருப்ப காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி,.மு.எண்.3184/எ4/2007 நாள் 22.10.07ல் திருத்திய ஓய்வூதியம் பயன்களின் விவரம் பின்வருமாறு:—

தன் விருப்ப திருத்திய ஓய்வூதியம் ரூ 6,662/— 29.6.03 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ 5496/—ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ 3,29,004/—ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ 2,14,344/— ஐ நேர் செய்து மீதம் தொகையான
ரூ 1,14,660/— ஐ வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் 29 வருடங்கள், 08 மாதங்கள், 21 நாட்கள் தகுதிப் பணிக்காலம் புரிந்த அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே 22.10.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 29.6.2003 முதல் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி10/22916/2007**
**ஆணையாளர் அவர்களின் 19.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.602/2007 பொருள் எண்.50

**ஓய்வூதியம்**

திரு.வி.அடைக்கன், செயற்பொறியாளர், மழைநீர் வடிகால் துறை, வயது முதிர்வு அடைந்தமையால் பணியிலிருந்து 31.12.2004 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். அவர் 37 வருடங்கள் 07 மாதங்கள் 26நாட்கள் தகுதிப்பணி புரிந்தமையால், சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணைகள், பொ.து.ந.க.எண்.பி10/44164/2005, நாள்.07.02.2006 மற்றும் 13.09.2006ன்படி தற்காலிக ஓய்வூதியமாக ரூ.4434/– மற்றும் தற்காலிக பணிக்கொடைத் தொகை ரூ.2,27,304/– வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.3415/எ4/2007, நாள்.17.09.2007 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதியம் விவரம் பின்வருமாறு:

| | திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதிய பயன்கள் |
|---|---|
| அ. வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் 01.01.2005 முதல் | ரூ.6138/– |
| ஆ. இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.3,22,031/– |
| இ. தொகுப்பு | ரூ.2046/– |
| ஈ. தொகுப்பு தொகை | ரூ.2,56,814/– |

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.சந்திரா அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.6138/–ஐ 19.12.2011 முடியவும், அதன் பின்னர் 20.12.2011 முதல் ரூ.3683/– பெறவும் தகுதியுடையவராகின்றார்.

மேலும், 1998ஆம் ஆண்டு மேற்கொண்ட சாலை வெட்டு சீரமைக்கும் பணியில் குறை இருப்பதாகவும், இதற்கு தமிழக விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககத்தினர் 2000ஆம் ஆண்டு மேற்கொண்ட நடவடிக்கையின் முடிவு அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தி ஓய்வூதிய பயன்களில் தற்காலிக ஓய்வூதியமும், பணிக்கொடையும், தனியருக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மன்றத் தீர்மான எண்.548/2007, நாள்.29.10.2007ல் திரு.வி.அடைக்கன், செயற்பொறியாளர், மற்றும் சிலருக்கு ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணைக்குட்பட்டும் ஒவ்வொருவரிடமும் உறுதி மொழிப் பத்திரம் பெற்றுக்கொண்டு முழு ஓய்வூதியப் பயன்கள் வழங்க மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.வி. அடைக்கன்,31.12.2004 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற செயற் பொறியாளர், மழைநீர் வடிகால்துறை, அவர்களிடம் உறுதி மொழிப் பத்திரம் பெற்றுக்கொண்டு, தணிக்கை சான்றின்படி திருத்திய ஓய்வூதிய பயன்களாக வயது முதிர்வு ஓய்வூதியமாக ஏற்கனவே, வழங்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியமான ரூ.4434/–லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் ரூ.6138/– வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,22,031/– (ரூபாய் மூன்று லட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து முப்பத்தி ஒன்று மட்டும்)ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தற்காலிக பணிக்கொடை ரூ.2,27,304/– மற்றும் தணிக்கை தடைகள் காரணமாக பிடித்தம் செய்ய வேண்டிய 25 விழுக்காடு பணிக்கொடை தொகை ரூ.80,508/– (ரூபாய் எண்பதாயிரத்து ஐநூற்று எட்டு மட்டும்) ஆக மொத்தம் (ரூ.2,27,304/– + ரூ.80,508) ஆக மொத்தம் ரூ.3,07,812/– போக மீதம் (ரூ.322031 – ரூ.307812 ) ரூ.14,219/– வழங்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2046/–ஐ தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,56,814/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்தி ஆறாயிரத்து எண்ணூற்று பதிநான்கு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.6138/–ல் லிருந்து ரூ.4092/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.சந்திரா அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.6138/– 19.12.2011 வரையிலும் அதன் பின்னர் 20.12.2011 முதல் ரூ.3683/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி10/23998/2007</u>
<u>ஆணையாளர் அவர்களின் 19.11.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.603/2007 பொருள் எண்.51

<u>ஓய்வூதியம்</u>

திரு.வி.முரளி, செயற்பொறியாளர், மண்டலம்–5, வயது முதிர்வு அடைந்தமையால் பணியிலிருந்து 30.11.2005 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, கடிதம் நி.மு.எண்.5282/எ4/2005, நாள்.17.10.2005ல் கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்கள் வழங்க சான்றளிக்கப்பட்டுள்ளது.

| | ஓய்வூதிய பயன்கள் |
|---|---|
| அ. வயது முதிர்வு ஓய்வூதியம் 01.12.2005 முதல் | ரூ.5623/– |
| ஆ. இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.3,05,778/– |
| இ. தொகுப்பு | ரூ.1874/– |
| ஈ. தொகுப்பு தொகை | ரூ.2,35,225/– |
| குடும்ப ஓய்வூதியம் (மனைவி திருமதி.வி.சுஜாதா) | ரூ.5623/– 19.12.2012 முடியவும், பின்னர் 20.12.2012 முதல் ரூ.3390/– |

தனியர், 1998ஆம் ஆண்டு மேற்கொண்ட சாலை வெட்டு சீரமைக்கும் பணியில் குறை இருப்பதாகவும், இதற்கு தமிழக விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககத்தினர் 2000ஆம் ஆண்டு மேற்கொண்ட நடவடிக்கையின் முடிவு அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தி ஓய்வூதிய பயன்களில் தனியருக்கு சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணைகள், பொ.து.ந.க.எண்.பி10/35351/2005, நாள்.07.02.2006 மற்றும் 13.06.2006ன்படி தற்காலிக ஓய்வூதியமாக ரூ.4217/– மற்றும் தற்காலிக பணிக்கொடைத் தொகை ரூ.2,29,333/– வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மன்றத் தீர்மான எண்.548/2007, நாள்.29.10.2007ல் திரு.வி.முரளி, செயற்பொறியாளர், (ஓய்வு) உள்பட மற்றும் சில பொறியாளர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணைக்குட்பட்டும் ஒவ்வொருவரிடமும் உறுதி மொழிப் பத்திரம் பெற்றுக்கொண்டு முழு ஓய்வூதியப் பயன்கள் வழங்க மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

36 வருடங்கள் 05 மாதங்கள் 08 நாட்கள் தகுதிப் பணிக்காலம் புரிந்த தனியர், சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட முழு ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.வி. முரளி, ஓய்வு பெற்ற செயற் பொறியாளர், மண்டலம்–5, அவர்களிடம் உறுதி மொழிப் பத்திரம் பெற்றுக்கொண்டு, தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்களாக வயது முதிர்வு ஓய்வூதியமாக ஏற்கனவே, வழங்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியமான ரூ.4217/–லிருந்து ஓய்வூதியம் ரூ.5623/– ஆக அதிகரித்து வழங்கவும், பணிக்கொடை தொகை ரூ.3,05,778/–ல் 25 விழுக்காடு பிடித்தம் ரூ.76,445/– மற்றும் தற்காலிக பணிக்கொடைரூ.2,29,333/– மற்றும் மிகை ஊதியம் ரூ.708/– ஆக மொத்தம் ரூ.3,06,486/–னை பணிக்கொடையில் நேர் செய்து மீதமுள்ள மிகை ஊதியம் ரூ.708/–யை ஓய்வூதிய நிலுவையில் பிடித்தம் செய்யவும், ஓய்வூதியத்திலிருந்து ரூ.1874/–ஐ தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,35,225/– (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரத்து இருநூற்று இருபத்தி ஐந்து மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.5623/–ல் லிருந்து ரூ.3749/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.சுஜாதா அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.5623/–ஐ 19.12.2012 முடியவும், அதன் பின்னர் 20.11.2012 முதல் ரூ.3390/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ4.ந.க.எண்.அ5/2257/05**
**ஆணையாளர் அவர்களின் 09.10.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.604/2007 பொருள் எண்.52

**பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.எம்.பரமானந்தம், துப்புரவு பணியாளர், கோட்டம்–59, பகுதி–12, அன்னார் 25.12.04 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் அன்னார் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களின் ஒழுங்கு நடவடிக்கை விதி எண்.9(1)ன் கீழ் குற்றம் சுமத்தி குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனை பெற்றுக் கொண்ட அன்னார் எந்த விளக்கமும் அளிக்காததால் மேல்நடவடிக்கை தொடர கருத்து கோரப்பட்டது.

தனியர் பணிக்கு வராத காலம் 6 மாதத்திற்கு மேல் ஆகியுள்ள நிலையில் அன்னார் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை 9(1)ன் கீழ் வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை விலக்கி கொண்டு 9(2)ன் கீழ் வழங்கி விளக்கம் பெற கோரப்பட்டது. அதன்படி அன்னாருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தி குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது.

குற்றச்சாட்டுகள்:

1) 25.12.04 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்ததால் மாநகராட்சியில் துப்புரவு பணிக்கு பெரிதும் குந்தகம் விளைவித்தது.
2) அவ்வாறு பணிக்கு வராமல் இருந்ததற்கு பகுதி அலுவலகம்–12, மூலம் வழங்கப்பட்ட குறிப்பாணையை பெற்றுக்கொண்டு இது நாள் வரை எந்த விளக்கமும் அளிக்காதது.
3) மேற்கண்ட செயல்களால் மேல் அதிகாரிகளின் ஆணையையும் அலுவலக நடைமுறைகளையும் உதாசீனப்படுத்தியது.

இக்குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்ட அன்னார் எந்த விளக்கமும் அளிக்காததால் அடுத்தகட்ட நடவடிக்கையாக விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் 15.12.2005 அன்று நடந்த விசாரணையின் போது தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு கீழ்கண்ட விளக்கம் அளித்தார்.

குற்றச்சாட்டு 1க்கு பணியாளரின் விளக்கம் :

தனக்கு சர்க்கரை வியாதியும் 2000ம் ஆண்டு முதல் மார்பு வலி இருந்து வந்ததாகவும் அப்போது முதல் மாரடைப்பு ஏற்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டதாகவும், அடுத்த 2002ம் ஆண்டும் 2004 ஆண்டும் தொடர்ந்து 2 தடவை மாரடைப்பு ஏற்பட்டு தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் கடந்த 3 மாதங்களுக்கு முன் மாரடைப்பு ஏற்பட்ட போது பல மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பதாகவும் தெரிவித்தார். தற்போது ஸ்டான்லி மருத்துவமனையில் தனக்கு பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய வேண்டி அறிவுறுத்தி உள்ளதாகவும் அதற்கான மருத்துவ குறிப்பு சான்றிதழ்களை தங்களிடம் சமர்ப்பிப்பதாகவும் தன்னை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க கேட்டுக்கொண்டார்.

குற்றச்சாட்டு 2 மற்றும் 3க்கு பணியாளரின் விளக்கம்

தனக்கு 4 முறை மாரடைப்பு ஏற்பட்டு தொடர் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டி இருந்ததால் தான் பணிக்கு வரமுடியவில்லை என்றும் தனக்கு அளிக்கப்பட்ட குறிப்பாணைக்கும் பதில் அளிக்க முடியாமல் போனது என்றும் தான் எந்த மேல் அதிகாரிகளின் ஆணையையும் அலுவலக நடைமுறைகளையும் உதாசீனப்படுத்தியது கிடையாது என்றும் தெரிவித்தார். விரைவில் அறுவை சிகிச்சை செய்ய டாக்டர்கள் கூறியுள்ளார். என்றும் தம்மை இக்குற்றத்திலிருந்து விடுவித்து மீண்டும் பணி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேற்கண்ட குற்றச்சாட்டுகள் மீது நடைபெற்ற விசாரணையில் விசாரணை அலுவலரான திரு.து.சூரிய நாராயணன், வழக்குரைஞர், உயர்நீதிமன்றம் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

குற்றச்சாட்டு 1க்கு விசாரணை அலுவலரின் கருத்து

தனியர் 2005ம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான பொது மருத்துவமனை. இசபெல்லா மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். இதில் தனியர் நெஞ்சுவலிக்கு சிகிச்சை பெற்றிருப்பது தெரிகிறது. எனவே, தனியர் மீதான முதல் குற்றச்சாட்டு நிரூபணம் ஆகவில்லை என்ற எனது கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

**<u>ம.அ4.ந.க.எண்.அ5/2257/05</u>**

<u>குற்றச்சாட்டு 2 மற்றும் 3க்கு விசாரணை அலுவலரின் கருத்து</u>

தனியர் சமர்பித்த ஆவணங்களில் இருந்து தனியருக்கு நெஞ்சுவலி காரணமாக மருத்துவ மனைகளில் சிகிச்சை எடுத்துக் கொண்டது தெளிவாகியுள்ள காரணத்தால் தனியர் மீதான 2வது மற்றும் 3வது குற்றச்சாடு நிரூபணமாகவில்லை என்று தெரிவித்துள்ளார்.

அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாடுகள் விசாரணை அலுவலரின் அறிக்கை ஆகிய தொடர்புடைய ஆவணங்கள் கவனமாக பரிசிலீக்கப்பட்டது. எனவே தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில்

1) 25.12.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் நடைபெற்ற விசாரணையில் விசாரணை அறிக்கையின் மீது இறுதி ஆணை வேண்டியும்.

2) அன்னார் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 25.12.2004 முதல் 12.09.2006 வரையுள்ள வரன்முறைப்படுத்துவதற்கான ஆணை வேண்டியும் சமர்பிக்கப்பட்டதில் ஆணையர் அவர்களின் 08.04.2004 நாளிட்ட செயல்முறை, ஆணையாளரின் அதிகார பகிர்ந்தளிப்பு செயல்முறை ஆணையின்படி நடவடிக்கை மேற்கொள்ள உதவி செயற் பொறியாளர் (தி.க.மே) அவர்களின் 11.03.2006 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித குந்தகமுமின்றி ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர அனுமதிக்க மண்டல அலுவலர்–4 அவர்கள் மூலம் ஆணை வழங்கப்பட்டது. அதன்படி அன்னார் 13.09.2006 அன்று மீண்டும் பணியில் சேர்ந்தார்.

திரு.எம்.பரமானந்தம், துப்புரவு பணியாளர், கோட்டம்–59, பகுதி–12, என்பவர் 25.12.2004 முதல் 12.09.2006 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து வரன்முறைப்படுத்த அரசாணை பெற நியமனக்குழு மற்றும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>ம.அ5.ந.க.எண்.சி2/8913/1999</u>

<u>ஆணையாளர் அவர்களின் 09.10.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.605/2007 பொருள் எண்.53

<u>பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்</u>

திரு.கே.பலராமன், துப்புரவு பணியாளர், கோட்டம்–76, பகுதி–15, மண்டலம்–5, அவர்கள் 03.06.1999 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக உதவி செயற்பொறியாளர், பகுதி–15, மண்டலம்–5, அவர்களால் குறிப்பாணை பதிவு தபாலில் அனுப்பப்பட்டது. சம்பந்தப்பட்ட பணியாளரே கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டும் விளக்கமேதும் அளிக்கவில்லை.

எனவே, தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் குற்றங்கள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

<u>குற்றச்சாட்டு 1:</u> முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்

<u>குற்றச்சாட்டு 2:</u> மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு விளக்கமளிக்காமல் உதாசீனப்படுத்தியுள்ளீர்.

மேலும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு பணியாளரை விசாரணை செய்ய திரு.டி.சந்திரசேகரன், செயற்பொறியாளர் (பொ) மண்டலம்–5, அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டார். அதன் பொருட்டு பணியாளரை விசாரணை செய்ய 11.02.2000, 30.03.2000, 25.04.2000 மற்றும் 10.08.2000 ஆகிய தேதிகளில் குறிப்பாணை வழங்கப்பட்டது. பணியாளர் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

எனவே, பணியாளர், விசாரணைக்கு ஆஜராகாததால் சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர் மற்றும் பகுதி எழுத்தர் ஆகியோரை விசாரணை மேற்கொண்டு ஒரு தலைபட்ச விசாரணை மேற்கொண்டு பணியாளர் மீது சாட்டப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணமாகிறது என விசாரணை அலுவலர் 14.05.2001 நாளிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இதன் தொடர்ச்சியாக ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி, பணியாளர் 20.08.2001 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்தார். விசாரணை அலுவலர் அறிக்கையை பணியாளருக்கு சார்பு செய்து விளக்கம் கோரப்பட்டது. பணியாளர் 11.10.2001 அன்று பெற்றுக்கொண்டும் விளக்கம் ஏதும் அளிக்கவில்லை.

இவ்வாறு இருக்கையில், தனியர் மீண்டும் 23.08.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக குறிப்பாணை வழங்கப்பட்டது. விளக்கம் பெறப்படவில்லை.

எனவே, சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் குற்றங்கள் சுமத்தி விளக்கம் கோரப்பட்டது.

<u>குற்றச்சாட்டு 1:</u> முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்

<u>குற்றச்சாட்டு 2:</u> மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு விளக்கமளிக்காமல் உதாசீனப்படுத்தியுள்ளீர்.

<u>குற்றச்சாட்டு 3:</u> துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

<u>குற்றச்சாட்டு4:</u> ஏற்கனவே 03.06.1999 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ள நிலையில் இத்தவறினை தொடர்ந்து செய்து வருகிறார்.

மேற்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தி விளக்கம் கோரப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட பணியாளர் தனது விளக்கத்தில் அவருடைய காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் அவரால் நகரக்கூட முடியவில்லை என்றும், அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி அவருக்கு விடுப்பு வழங்கவும், விடுப்பு இல்லாவிட்டால் சம்பளமில்லா விடுப்பாக அனுமதிக்கவும், காலில் முறிவு ஏற்பட்டதால் பணிக்கு வர இயலவில்லை என்றும், அவரை மன்னித்து மீண்டும் பணிக்கு எடுத்துக்கொள்ள கோரியுள்ளார்.

தனியர் 23.08.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்தை விசாரணை செய்ய திரு.செல்வராஜ், உதவி செயற்பொறியாளர், கோட்டம்–65, அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டார். அதனை விசாரணை செய்த விசாரணை அலுவலர் தனது 05.10.2002 நாளிட்ட அறிக்கையில் இரண்டு குற்றச்சாட்டுகள் நிரூபணமாகிறது என அறிக்கையளித்துள்ளார். விசாரணை அலுவலர் அறிக்கையின் மீது விளக்கம் கோரி குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட தனியர் தனது விளக்கத்தில், துப்புரவு ஆய்வாளர் அவர்கள் தனது கையெழுத்தில் எழுதியுள்ள விவரங்கள் அனைத்தும் அவர் வன்மையாக மறுக்கிறார். என்றும் குறிப்பாணை மற்றும் விசாரணை அறிக்கை நகல் ஏதும் மண்டலம்–5 பணியாளர்களாலோ மற்றும் எவராலோ அவர் வீட்டிற்கு கொண்டு வரப்படவில்லை என்றும் காலதாமதத்தை ஈடு செய்யவே கால் ஒடிந்த நிலையில் உள்ள ஏழை துப்புரவு பணியாளரின் எதிர்காலத்தை பஸ்பமாக்க முயற்சித்துள்ளார்கள் என்றும், அவர் நீண்ட கால பணியில் இது போன்ற நிலை அவருக்கு ஏற்படவில்லை என்றும் விசாரணை அலுவலர் அறிக்கையில் அவர் மீது

சுமத்தப்பட்ட மூன்றாவது குற்றச்சாட்டு மட்டும் நிரூபணமாகவில்லையென தெரிவித்துள்ளார் என்றும் அவரை விசாரணையின் போது நேரடியாக பார்த்தபோது விசாரணை அலுவலரே அவர் நிலையை கண்டு வருத்தம் தெரிவித்தார் என்றும், குற்றச்சாட்டு–4க்கான அவர் விளக்கம் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டது என்றும் குறிப்பாணைக்கு அவர் கொடுத்த விளக்கத்தையே பெற்றுக் கொள்ளப்பட்டதாகவே காட்டிக் கொள்ளாமல் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்பதே சரியாகும் என்றும், இந்த குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ள நிலையில் துப்புரவு ஆய்வாளரையோ அல்லது கோட்ட அலுவலகத்தில் மற்ற எவரையோ உண்மை நிலையை அறிந்து கொள்ளும் பொருட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அவர் விளக்கத்தை பரிசீலிக்காமலேயே குற்றச்சாட்டு விசாரணை அலுவலரால் நிரூபிக்கப்பட்டுவிட்டது. துரதிருஷ்டவசமானதாகும் என்றும், அவரை மன்னித்து மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளுமாறும் அல்லது அவரை தன்விருப்ப ஓய்வு வழங்கி அவரையும் அவர் குடும்பத்தையும் காப்பாற்றுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தனியர் மீது தொடரப்பட்ட குற்றச்சாட்டுகள் அதற்கு தனியரின் விளக்கம் விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் அதற்கு தனியரின் கூடுதல் விளக்கம், ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் சுயமாகவும், கவனமாகவும் பரிசீலனை செய்யப்பட்டன. தனியர் 03.06.1999 முதல் 19.08.2001 வரை மற்றும் 23.08.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத செயலுக்கு தனியர் அளித்த எந்த விளக்கமும் ஏற்றுக்கொள்ள இயலாது. இச்செயல் கடுமையான தண்டனை பெறுவதற்குரியவை எனினும் தனியரின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு நிகழ்வு கருணையுடன் அணுகப்பட்டதில் தனியரின் ஊதிய உயர்வினை 3 ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்வது தகுந்த தண்டனையாகும் என கருதி அவ்வாறே ஆணையிடப்பட்டது. மேலும், தனியரை மீண்டும் பணியில் அனுமதிக்கவும் ஆணை வழங்கப்பட்டது. அதன்படி தனியர் 04.06.2004 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில் பணியாளர் 21.04.2005 பிற்பகல் முதல் மருத்துவ இயலாமை ஓய்வு பெற்றார். தற்காலிக ஓய்வூதிய மற்றும் பணிக்கொடை தீர்வு செய்யப்பட்டது. தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக ஊதிய உயர்வினை மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்தம் செய்து வழங்கப்பட்ட செயல்முறை ஆணையை ரத்து செய்து அதற்கு இணையான தொகை ரூ.8664/–ஐ பணியாளருக்கு வழங்கப்படவுள்ள பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்ய திருத்திய செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திரு.கே.பலராமன், துப்புரவு பணியாளர், கோட்டம்–76, பகுதி–15, மண்டலம்–5, அவர்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 03.06.1999 முதல் 19.08.2001 வரை மற்றும் 23.08.2001 முதல் 03.06.2004 வரை ஓராண்டிற்கு மேற்படுவதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசாணை பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ5.ந.க.எண்.சி2/10096/2005
ஆணையாளர் அவர்களின் 04.10.2007 நாளிட்ட குறிப்பு

## 28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.606/2007 பொருள் எண்.54

### பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திருமதி.ஜி.விஜயகுமாரி, துப்புரவு பணியாளர், கோட்டம்–71, பகுதி–14, மண்டலம்–5, அவர்கள் 30.10.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக உதவி செயற்பொறியாளர், பகுதி–14, அவர்களால் குறிப்பாணை வழங்கப்பட்டது விளக்கம் பெறப்படவில்லை.

எனவே, சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் குற்றங்கள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

குற்றச்சாட்டு 1: தாங்கள் 30.10.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்

குற்றச்சாட்டு 2: மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்காது உதாசீனப்படுத்தியுள்ளீர்.

குற்றச்சாட்டு 3: துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக்கொண்ட பணியாளர் 17.06.2006 நாளிட்ட விளக்கக் கடிதத்தில் கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

குற்றச்சாட்டு–1க்கான விளக்கம்

தான், தன் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை என்ற தகவல் ஆந்திராவிலிருந்து வந்ததால், தன் சொந்த ஊருக்கு சென்றிருந்ததாகவும், அவரின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்த காரணத்தாலும், அவரைப் பார்த்துக்கொள்ள வேறு யாரும் இல்லாத காரணத்தினாலும், அவரைபக்கத்திலிருந்து பார்த்துக் கொள்ள வேண்டிய காரணத்தினால், தான் உடனே தன் ஊருக்க சென்றபடியால் தன்னால் அலுவலகத்திற்கு தகவல் ஏதும் தெரிவிக்க இயலவில்லை என்றும், தன் வீட்டின் அருகிலிருந்து தன் அலுவலகத்திற்கு யாரும் வராத காரணத்தினால், தன்னால் அலுவலகத்திற்கு உரிய முறையில் தகவல் தெரிவிக்க இயலவில்லை என்றும், இனி வருங்காலங்களில் இது போன்று தவறு செய்யமாட்டேன் என்றும்,

குற்றச்சாட்டு–2க்கான விளக்கம்

தன் தாயின் உடல்நிலை பாதிக்கப்பட்ட காரணத்தினால் தான், உடன் தன் சொந்த ஊரான ஆந்திராவிற்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும், அதனால், தான் உடன் தன் சொந்த ஊருக்கு சென்றுவிட்டதாகவும், அதனால் உயர் அதிகாரி வழங்கிய குறிப்பாணையை தான் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதாகவும் தன் வீட்டின் அருகாமையில் உள்ளவர்களுக்கு தன் சொந்த ஊரின் விலாசம் தெரியாத காரணத்தினால், அவர்களால் தனக்கு தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும், தன் பணிக்காலத்தில் தான் ஒரு போதும் தன் உயர் அதிகாரிகள் கூறும் பணிகளை தட்டாமல் செய்து முடித்துள்ளதாகவும், தான் உயர் அதிகாரி வழங்கிய குறிப்பாணைக்கு உதாசீனப்படுத்தும் நோக்கத்துடன் நடந்து கொள்ளவில்லை எனவும்,

குற்றச்சாட்டு–3க்கான விளக்கம்

தான் தன் தாயாரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தன் சொந்த ஊரான ஆந்திராவிற்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும், அதனால் தான் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க இயலாமல் போனதாகவும், தான் ஒரு போதும் மாநகராட்சி பணிக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டது கிடையாது என்றும், தன் தாயாரின் உடல்நிலை காரணமாக தான் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விட்டதாகவும், இனி வருங்காலங்களில் இது போன்று தவறு செய்யமாட்டேன் என்றும், மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து தன்னை விடுவிக்குமாறும், தன்னை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு கோரியுள்ளார்.

அதன்படி பணியாளர் அளித்த விளக்கத்தின் பேரில் தனியரை மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பணியாளர் 22.07.2006 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிகிறார்.

**ம.அ5.ந.க.எண்.சி2/10096/2005**

பின்னர், பணியாளர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய திரு.பி.ஆர்.கண்ணன், துணை ஆட்சியர்(நிர்வாகம்)(பொறுப்பு) அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டார். அதன்படி பணியாளரை விசாரணை செய்த அலுவலர் தனது 06.12.2006 நாளிட்ட விசாரணை அறிக்கையில் அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதாக அறிக்கையளித்துள்ளார்.

விசாரணை அலுவலர் அறிக்கையின் மீது கூடுதல் விளக்கம் கோரி குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனைப் பெற்றுக் கொண்ட பணியாளர் தனது விளக்கக் கடிதத்தில் தவிர்க்க முடியாத வேறு வழி இல்லாத நிலையில், ஆந்திராவில் வசிக்கும் தனது தாயாருடன் இருக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டதாகவும், தாயாருக்கு வேறு எந்த உறவுகள் இல்லாத காரணத்தாலும், தான் அவர் உடல்நிலையை கவனித்துக் கொள்வதற்கு இருக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டதாகவும், தான் ஒரு அனாதை என்றும், தனக்கு எந்த ஒரு உறவினர்களும் கிடையாதென்றும், தன்னால் தகுந்த நேரத்தில் பணிக்கு முன்னறிவிப்பு செய்ய இயலவில்லையென்றும், இதுபோன்று தனது பணிக்காலத்தில் எந்த ஒரு தவறும் நடந்தது இல்லையென்றும், இனி வருங்காலங்களிலும் எந்த விதமான ஒழுங்கு நடவடிக்கையும் தன் மீது ஏற்படாதவாறு பணியாற்றுவதாகவும்,முதல் முறையாக இத்தவறை செய்துள்ள தனக்கு மன்னிபு வழங்குமாறும் கோரியுள்ளார்.

தனியர் 30.10.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம், விசாரணை அலுவலர் அறிக்கை, அதற்கு பணியாளரின் கூடுதல் விளக்கம் ஆகிய தொடர்புடைய ஆவணங்களின் அடிப்படையில், நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் கடுமையானவை அவை தண்டனைக்குரியவை. எனினும் நிகழ்வு கருணையுடன் அணுகியதில், இறுதி ஆணையாக மூன்று ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், தனியர் பணிக்கு வராத காலமான 30.10.2002 முதல் 21.07.2006 வரை உள்ள காலம் ஓராண்டைக் கடந்துள்ளதால், அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று வரன்முறைப்படுத்தவும் ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திருமதி.ஜி.விஜயகுமாரி, துப்புரவு பணியாளர், கோட்டம்–71, பகுதி–14, அவர்கள் 30.10.2002 முதல் 21.07.2006 வரை உள்ள காலம் ஓராண்டைக் கடந்துள்ளதால் அக்காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.607/2007 பொருள் எண்.55

**பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.எம்.குப்புசாமி, ஓட்டுநர், மண்டலம்–5, என்பவர் 01.09.1993 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்திற்காக துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தி 29.07.1994 நாளிட்ட குற்றக் குறிப்பாணை வழங்கி ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது.

தனியர் ஓராண்டுக்கு மேல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றச்சாட்டு முடிவுறாத நிலையில் 09.04.1998 முதல் பணியில் சேர அனுமதிக்கப்பட்டு பின்னர், ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி 30.06.1998 முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார். மேலும், 4 ஆண்டுகளுக்கு மேல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்துள்ளார். இவரது பணிக்கு வராத நாட்களை பணிவரன் முறைப்படுத்திட அரசு ஆணைவேண்டி 31.05.1999 அன்று அரசுக்கு ஆணையர் மூலமாக கடிதம் அனுப்பப்பட்டது. இக்கடிதத்தில்

1. 30.06.1998 அன்று ஓய்வு பெற்ற திரு.எம்.குப்புசாமி, ஓட்டுநர், மண்டலம்–5, அவர்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத நாட்களை 01.09.1993 முதல் 08.04.1998 வரை சம்பளமில்லா விடுப்பாக பணிவரன் முறைபடுத்திடவும்
2. பணியாளர் ஓய்வு பெற்றுவிட்டதால் அன்னாருக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டதன் தண்டனையை திரு.குப்புசாமி அவர்களுக்கு வழங்கிட இயலாததால் ஓய்வூதிய விதிகளின் கீழ்தண்டனை வழங்கிடவும்
3. பணியாளருக்கு ஓய்வூதியம் வழங்கிட வேண்டியும் அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

03.09.1999 நாளிட்ட அரசு கடிதத்தில் தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத நாட்களான 01.09.1993 முதல் 08.04.1998 வரை சம்பளமில்லா விடுப்பாக வரன்முறைப்படுத்த வேண்டுவது குறித்த ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்கஇயலாது என அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோப்பு நடைமுறையில் இருக்கும் சமயத்தில் திரு.குப்புசாமி அவர்கள் 30.06.1998 அன்று ஓய்வு பெற்று 29.12.2001 அன்று இறந்துவிட்டார்.

திரு.குப்புசாமி அவர்களுக்கு அவர் இறப்பதற்கு முன்பாக தனியருக்கு வருங்கால வைப்பு நிதி தொகை ரூ.10,496/–ஐ காசோலையாக 11.04.2000 அன்று வழங்கப்பட்டது.

தனியர் ஓய்வு பெற்றவுடன் ஓய்வு காலப் பணப்பயன்கள் வழங்க வேண்டி விண்ணப்பித்திருந்து 29.12.2001 அன்று இறந்துவிட்ட பிறகு கோப்பின் மீது மேல் நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

இந்நிலையில் காலம் சென்ற பணியாளரின் வாரிசுதாரரும், மகளுமான திருமதி.அமுதா அவர்கள் அவரது தந்தைக்கு வழங்கப்பட வேண்டிய பணிக்கொடை, தொகுப்புத்தொகை மற்றும் இதரபணப்பயன்களை 18% வட்டியுடன் வழங்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் உறுதி ஆவணம் (Affidavit) அளித்ததின் அடிப்படையில் 28.07.2006 நாளிட்ட உயர்நீதிமன்ற ஆணையில் காலஞ்சென்ற திரு.எம்.குப்புசாமி, ஓட்டுநர் அவர்களின் மகளும், வாரிசுதாரருமான திருமதி.அமுதாவிற்கு அனைத்து பணப்பயன்களையும் 9% வட்டியுடன் ஆறு வாரத்திற்குள் தீர்வு செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் சட்ட அலுவலர் அவர்களது குறிப்பில் அரசாணை எண்.73 நாள்.29.01.87 மற்றும் 387 நாள்.30.05.1988ன்படி 30.06.1998 அன்று ஓய்வு பெற்று 29.12.2001 அன்று காலமான திரு.எம்.குப்புசாமி, ஓட்டுநரது வாரிசுதாரரும் மகளுமான திருமதி.அமுதா, அவர்கள் 25 வயதை கடந்துள்ளதாலும் மேலும் திருமணமானவராக உள்ளதால் இவருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க இயலாது எனவும் மேலும் 28.07.2006 நாளிட்ட உயர்நீதிமன்ற ஆணையின்படி இவருக்கு நிலுவையில் உள்ள ஓய்வூதிய பணிக்கொடை மற்றும் இதர பணப்பயன்களை 9% வட்டியுடன் உயர்நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவிற்குள் வழங்கும்படி தெரிவித்துள்ளார்.

<u>ம.அ5.ந.க.எண்.சி2/7313/2006</u>

அதன்படி, திரு.எம்.குப்புசாமி, ஓட்டுநர் அவர்களின் வாரிசுதாரரும் மகளுமான திருமதி.அமுதா அவர்களுக்கு 01.07.1998 முதல் 29.12.2001 வரை ஓய்வு பெற்று காலமான ஓட்டுநரின் நிலுவையிலுள்ள தற்காலிக ஓய்வூதியம் மற்றும் தற்காலிக பணிக்கொடை அதற்கான தொகைக்கு 9% வட்டியுடன் தீர்வு செய்யப்பட்டது.

திரு.எம்.குப்புசாமி, ஓட்டுநர், ஓய்வு 30.06.1998 மற்றும் இறப்பு நாள்.29.12.2001 மண்டலம்–5 அவர்களின் பணிக்காலத்தில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 01.09.1993 முதல் 08.04.1998 வரையிலான காலம் ஓராண்டினைக் கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழுவின் தீர்மான எண்.147/07 நாள்.15.05.2007 பெறப்பட்டது.

இதனடிப்படையில், அரசுக்கு அனுப்பவிருக்கும் வரைவுக் கடிதத்தில் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்ட இவ்வலுவலகக் 02.07.2007 நாளிட்ட குறிப்பு ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

உதவி ஆணையர் (பொ.நி.ம.ப)அவர்களின் 25.07.2007 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணை வழங்காத நிலையில் தனியர் பணிக்கு வராத காலத்தினை வரன்முறைப்படுத்த இயலாது எனவும், தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை முடிவுறாத நிலையில், தனியர் வயது முதிர்வு ஓய்வு பெற்ற பின்னர் காலமானதால், ஒழுங்கு நடவடிக்கையை கைவிட அரசாணை பெற நடவடிக்கை மேற்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, திரு.எம்.குப்புசாமி, ஓட்டுநர், மண்டல அலுவலகம்–5, ஓய்வு 30.06.1998 மற்றும் இறப்பு நாள்.29.12.2001 அவர்களின் வாரிசுதாரரும், மகளுமாகிய திருமதி.அமுதா அவர்களுக்கு மீதமுள்ள 25% சதவீத ஓய்வூதிய பயன்கள் தீர்வு செய்ய அன்னார் முன்னறிவிப்பின்றி பணிக்கு 01.09.1993 முதல் வராதது குறித்து தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை கைவிடவும், தனியர் பணிக்கு வராத காலமான 01.09.1993 முதல் 08.04.1998 வரையிலான காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசின் தளர்வாணைபெற, அரசுக்கு செயற் குறிப்பு அனுப்ப, மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ5.ந.க.எண்.சி2/6701/2002
ஆணையாளர் அவர்களின் 04.10.2007 நாளிட்ட குறிப்பு

28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.608/2007 பொருள் எண்.56

பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திரு.எஸ்.சுந்தர், நிரந்தர துப்புரவு பணியாளர், இ.எம்.பி எண்.735701, கோட்டம்–70, பகுதி–14, மண்டலம்–5, அவர்கள் 15.05.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தனியரின் விளக்கம் கோரி குறிப்பாணை உதவி செயற்பொறியாளர், பகுதி–14, அவர்கள் மூலமாக தனியரின் வீட்டு கதவில் ஒட்டி சார்பு செய்து இரண்டு சாட்சிகளின் கையொப்பம் பெறப்பட்டது.

தனியர் எவ்வித விளக்கமும் அளிக்காததால் தனியரின் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 1983ன் துணை விதி 9(2)ன் கீழ் கீழ்காணும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, குற்றச்சாட்டு குறிப்பாணை தனியரின் வீட்டு கதவில் ஒட்டி சார்பு செய்து அருகில் குடியிருக்கும் இரண்டு சாட்சிகளின் கையொப்பம் பெறப்பட்டது.

குற்றச்சாட்டு 1: தாங்கள் 15.05.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்

குற்றச்சாட்டு 2: வீட்டு முகவரி மாற்றம் குறித்து அலுவலகத்திற்கு தெரியப்படுத்தாமல் உதாசீனப்படுத்தியுள்ளீர்.

குற்றச்சாட்டு 3: துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு தனியர் எவ்வித விளக்கமும் சமர்ப்பிக்கவில்லை என்பதால் இவ்வொழுங்கு நடவடிக்கையின் மீது மேல் நடவடிக்கையாக நேர்முக விசாரணை நடத்த விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு நேர்முக விசாரணை நடைபெற்று விசாரணை அலுவலர் அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

குற்றச்சாட்டு 1க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை

பதில் ஏற்புடையதாக இல்லை எனவே, இக்குற்றச்சாட்டு நிருபணமாகின்றது.

குற்றச்சாட்டு 2க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை

பதில் ஏற்புடையதாக இல்லை எனவே, இக்குற்றச்சாட்டு நிருபணமாகின்றது.

குற்றச்சாட்டு 3க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை

குற்றம் நிருபணமாகவில்லை.

விசாரணை அலுவலர் தனது 12.03.2004 நாளிட்ட விசாரணை அறிக்கையில் தனியரின் மீது சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளில் இரண்டு குற்றச்சாட்டுகள் மட்டும் நிருபணமாகின்றது என அறிக்கை அளித்துள்ளார்.

தற்போதைய திருத்தப்பட்ட விதிகளின்படி, விசாரணை அலுவலர் அறிக்கையின் மீது தனியரின் மேல் விளக்கம் கோரி குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனை பெற்றுக் கொண்ட தனியர் 17.03.2004 நாளிட்ட விளக்கத்தில் தான் உடல் நிலை சரியில்லாமல் 15.05.2001 முதல் பணிக்கு வர இயலவில்லை என்றும், தானும் தனது குடும்பமும் மிகவும் கஷ்டப்பட்டு கொண்டு இருப்பதாகவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பணிக்கு வர இயலாத நிலை ஏற்பட்டது என்றும், மேலும் தனக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டதால் நாட்டு வைத்தியம் பார்த்து தற்பொழுது உடல்நிலை தேறியுள்ளதாகவும், ஆகவே தன் மீத கருணை வைத்து மீண்டும் பணியில் சேர்க்கும் படியும், தன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்குமாறும் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்வதாகவும் கோரியுள்ளார்.

தனியர் சமர்ப்பித்துள்ள மேல் விளக்கத்தின் அடிப்படையில் தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமின்றி தனியரை மீண்டும் பணியில் சேர அனுமதித்து மண்டல அலுவலர்–5 அவர்கள் வழங்கிய 19.03.2004 நாளிட்ட உத்திரவின்படி தனியர் 23.03.2004 முதல் மீண்டும் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

எனவே, தனியரின் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வர விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் அதன் மீதான தனியரின் மேல் விளக்கம் ஆகியவற்றை கவனமாக பரிசீலிக்கப்பட்டு தனியர் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையின் மீது இறுதி ஆணையாக தனியரின் ஊதிய உயர்வு

**ம.அ5.ந.க.எண்.சி2/6701/2002**

மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், மற்றும் தனியர் பணிக்கு வராத காலமான 15.05.2001 முதல் 22.03.2004 வரையிலான காலம் ஆறு மாதங்களுக்கு மேற்பட்டுள்ள நிலையில் அடிப்படை விதி 18(1)ஐ தளர்த்தி பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த முன்மொழிவுகளை நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி அரசின் ஆணை பெற்ற பின்னர் வரன்முறைப்படுத்தப்படும் என்று ஆணை வழங்கப்பட்டது. அதனை 18.06.2004 அன்று பெற்றுக் கொண்டார். அதனை பெற்ற பணியாளர் 04.08.2004 அன்று தனது மேல்முறையீட்டு மனுவை நியமனக்குழுவிற்கு சமர்ப்பித்துள்ளார். அதில் அவர் 15.05.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விட்டதால் அவரை விசாரணை அலுவலர் ஆஜராக சொன்னதாகவும், அதன்படி ஆஜரானதாகவும், அதன்படி அவரை 23.03.2004 முதல் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. என்றும், அதன்படி அவர் 23.03.2004 அன்று பளியில் சேர்ந்ததாகவும், தன் சம்பளத்தில் ஊதிய உயர்வு மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது. அப்படி நிறுத்தம் செய்வதால் அவரது குடும்பம் பாழாகிவிடும் என்றும் அவர் மீது கருணை வைத்து மூன்று ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ய வழங்கப்பட்ட ஆணையை ரத்து செய்ய கோரியுள்ளார்.

பணியாளரின் மேல்முறையீட்டு மனுவை பரிசீலனை செய்த நியமனக்குழு தீர்மான எண்.193/05 22.06.2005 நாளிட்ட தீர்மானத்தின் படி நிர்வாகம் வழங்கிய தண்டனையான மூன்று ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ததை உறுதி செய்துள்ளது.

எனவே, திரு.எஸ்.சுந்தர், துப்புரவு பணியாளர், இ.எம்.பி.எண்.735701, கோட்டம்–70, பகுதி–14, மண்டலம்–5, அவர்கள் 15.05.2001 முதல் 22.03.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஆறு மாத காலத்தினை கடந்துள்ளதால் இவர் பொருட்டு அடிப்படை விதி 18(1)ஐ தளர்வு செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ6.ந.க.எண்.அ4/6694/2003
ஆணையாளர் அவர்களின் 09.10.2007 நாளிட்ட குறிப்பு

28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.609/2007 பொருள் எண்.57

பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திருமதி.மல்லிக் உன்னிசா, சாலைப் பணியாளர், கோட்டம்–84, பகுதி–16, 17.01.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் உதவி செயற் பொறியாளர், பகுதி–16 அவர்களால் குறிப்பாணை வழங்கப்பட்டது. தனியர் குறிப்பாணையை பெற்றுக் கொண்டு விளக்கம் ஏதும் அளிக்காமல் விட்டுவிட்டார்.

குறிப்பாணைக்கு விளக்கம் பெறாததால், சென்னை மநாகராட்சி பணியாளர்கள் 3 மற்றும் 4ம் நிலை (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதிகள் 9(2)ன்படி பின்வரும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

குற்றச்சாட்டுக்கள்:

1. 17.01.2002 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்றுவிட்டது.
2. இதே தவறுகளை மீண்டும் மீண்டும் செய்து வருதல்
3. முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் சாலை பணிகளுக்கு குந்தகம் விளைவித்தது.

குற்றம் சுமத்தப்பட்ட பணியாளர் குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டு கீழ்கண்டவாறு தனது விளக்கத்தை அளித்தார்.

குற்றச்சாட்டு–1க்கு பணியாளரது விளக்கம்

தனக்கு உடல்நிலை மிகவும் பாதிப்படைந்து வயிற்று வலியாலும், அடிக்கடி கர்ப்பபை தொந்தரவு காரணமாக 17.01.2002 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை என தெரிவித்தார்.

குற்றச்சாட்டு–2க்கு பணியாளரது விளக்கம்

தனக்கு நீண்ட காலமாகவே கர்ப்பபை பாதிப்பு காரணமாக தன்னால் அடிக்கடி பணிக்கு வராமல் இருந்து வருவதாகவும், இனி வருங்காலங்களில் முன்னறிவிப்பு பெற்றுக் கொண்டு விடுப்பில் செல்வேன் என தெரிவித்தார்.

குற்றச்சாட்டு–3க்கு பணியாளரது விளக்கம்

தன்னால் சாலை பணிகளுக்கு குந்தகம் விளைவித்தற்கு தன்னுடைய விளக்கத்தை ஏற்றுக்கொண்டு தன் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் விடுப்பில் செல்லநேரிட்டது என தெரிவித்தார்.

13.08.2002 நாளிட்ட உதவி ஆணையாளர்–6, அவர்களின் செயல்முறை ஆணையில் திரு.டி.பாலசுப்ரமணியன், உதவி செயற்பொறியாளர், பகுதி–16, அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டார்.

விசாரணை அலுவலர் குற்றப் பணியாளரை நேர்முக விசாரணை மேற்கொண்டு தனது விளக்கத்தை கீழ்கண்டவாறு அளித்தார்.

குற்றச்சாட்டு–1க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை

முன்னறிவிப்பு செய்யாமல் பணிக்கு வராதது தவறு என்று ஒப்புக் கொண்டுள்ளார். எனவே, இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

குற்றச்சாட்டு–2க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை

அடிக்கடி பணிக்கு வராமல் இருப்பதை பணியாளர் ஒப்புக் கொண்டுள்ளார் இக்குற்றச்சாட்டும் நிரூபணமாகிறது.

குற்றச்சாட்டு–3க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை

பணியாளர் பணிக்கு வராததால் பணிகள் பாதிக்கப்பட காரணமானதை ஒப்புக் கொண்டுள்ளார். எனவே இக்குற்றச்சாட்டும் நிரூபணமாகிறது.

விசாரணை அலுவலரின் அறிக்கை தனியருக்கு சார்பு செய்யப்பட்டு மேல் விளக்கம் கோரப்பட்டது. விசாரணை அலுவலர் அறிக்கையை குற்றப் பணியாளர் பெற்றுக் கொண்டு தனது மேல் விளக்கத்தில் விசாரணை அறிக்கை மீது எவ்வித மேல்முறையீடு செய்ய விரும்பவில்லை எனவும் இம்முறை மன்னித்து தன்னை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்குமாறு வேண்டினார்.

மற்றொரு நிகழ்வில், தனியர் 11.04.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் குறிப்பாணை பதிவு தபாலில் அனுப்பப்பட்டது.

<u>ம.அ6.ந.க.எண்.அ4/6694/2003</u>

குறிப்பாணைக்கு விளக்கம் பெறாததால், சென்னை மாநகராட்சி பணியாளர்கள் 3 மற்றும் 4ம்நிலை (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதிகள் 9(2)ன்படி பின்வரும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

<u>குற்றச்சாட்டுக்கள்</u>

1. 09.06.2000 மற்றும் 17.01.2002 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக சென்னை மாநகராட்சி விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும் 11.04.2003 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விட்டது.

2. இதே போன்றே தன்னிச்சையாக பணிக்கு வராமல் நின்றுவிடுவதை வழக்கமாக கொண்டுள்ளது.
3. முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் சாலை பணிகளுக்கு குந்தகம் விளைவித்தது.
4. 11.04.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது மட்டுமல்லாமல் முன்னதாகவே முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருப்பதை தனது வழக்கமாக கொண்டு இருப்பதால் இவர் சென்னை மாநகராட்சி பணியை நம்பி இருக்கவில்லை என தெரிய வருகிறது.

குற்றம் சுமத்தப்பட்ட பணியாளர் குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டு கீழ்கண்டவாறு தனது விளக்கத்தை அளித்தார்.

<u>குற்றச்சாட்டு–1க்கு பணியாளரது விளக்கம்</u>

தனது உடல் நிலை மிகவும் பாதிப்படைந்து, வயிற்று வலியால் துன்புற்று வந்ததால் தன்னால் 11.04.2003 முதல் பணிக்கு வர இயலாமல் போனதாகவும், தனது உடல்நிலை காரணமாகவே தன்னால் பணிக்கு வர இயலவில்லை எனவும், தான் வேண்டுமென்றே முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விடவில்லை என தெரிவித்தார்.

<u>குற்றச்சாட்டு–2க்கு பணியாளரது விளக்கம்</u>

தனது உடல்நிலை காரணமாகவே தன்னால் பணிக்கு வர இயலாமல் போனதாகவும், தான் வேண்டுமென்றே தன்னிச்சையாக முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்றுவிடவில்லை என்வும் தனக்கு வயிற்று வலி கடுமையாக இருந்ததால் தன்னால் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்து விடுப்பு அனுமதி பெற இயலவில்லை என தெரிவித்தார்.

<u>குற்றச்சாட்டு–3க்கு பணியாளரது விளக்கம்</u>

தான் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் சாலை பணிகள் பாதிக்கப்பட்டிருப்பின், அதற்காக தான் மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்டுக் கொள்வதாக தெரிவித்தார்.

<u>குற்றச்சாட்டு–4க்கு பணியாளரது விளக்கம்</u>

தான் வேண்டுமென்றே தன்னிச்சையாக பணிக்கு வராமல் நின்றுவிடவில்லை. தனது உடல்நிலை பாதிக்கப்பட்டதன் காரணமாகவே தன்னால் அனுமதி பெற்று விடுப்பு துய்க்க இயலாததாகவும், தானும், தனது குழந்தைகளும் மாநகராட்சி பணியை நம்பியே தங்களது வாழ்க்கையை நடத்தி வருகிறோம் எனவும், தனக்கு மாநகராட்சி சாலை பணியை தவிர வேறு எந்த வேலையும் செய்ய தெரியாது என தெரிவித்தார்.

தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மீது நேர்முக விசாரணை நடத்த திரு.என்.சஞ்சீவி ஓய்வு பெற்ற துணை ஆணையர் அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டார். தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் எவ்வித குந்தகமின்றி 14.09.2004 அன்று பணியில் சேர்ந்தார்.

விசாரணை அலுவலர் தனது 31.01.2005 நாளிட்ட அறிக்கையில் குற்றப் பணியாளரின் ஒப்புதல் வாக்கு மூலத்திலிருந்தே அவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகிறது என தெரிவித்தார்.

விசாரணை அலுவலர் அறிக்கை தனியருக்கு சார்பு செய்யப்பட்டு மேல் விளக்கம் பெறப்பட்டது.

தனியர் விசாரணை அலுவலர் அறிக்கையை பெற்றுக் கொண்டு தனது மேல் விளக்கத்தில் விசாரணை அறிக்கை மீது எவ்வித மேல்முறையீடும் செய்ய விரும்பவில்லை என தெரிவித்தார்.

தனியர் மீது முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அதற்கு பணியாளரின் விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை அதற்கு தனியரின் கூடுதல் விளக்கம், ஆகிய தொடர்புடைய ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் யாவும் கடுமையானவை. அவை கடுமையான தண்டனைக்குரியது எனினும் நிகழ்வு கருணையுடன் அணுகியதில் இறுதி ஆணையாக தனியரின் ஊதிய உயர்வை ஓராண்டுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், 17.01.2002 முதல் 15.09.2002 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டுக்குள் உள்ளதால் தகுதியுள்ள விடுப்பாக பாவித்தும் 11.04.2003 முதல் 13.09.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டுக்கு மேல் உள்ளதால் அடிப்படை விதி 18(2)ன் கீழ் அரசின் தளர்வானை பெற்று வரன்முறைப்படுத்த ஆணையாளர் அவர்களால் ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திருமதி.மல்லிக் உன்னிசா, சாலைப் பணியாளர், கோட்டம்–84, பகுதி–16, மண்டலம்–6, என்பவர் 11.04.2003 முதல் 13.09.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த இதன் பொருட்டு அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.610/2007 பொருள் எண்.58

<u>பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்</u>

திரு.குலம்பராவ், தட்டச்சர், பணித்துறை அவர்கள் 21.04.2005 முதல் 03.09.2006 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை குறித்து தனியர் மீது சென்னை மாநகராட்சி 3(ம) 4–ம் நிலைப் பணியமைப்பு (ஒழுங்கு (ம) மேல்முறையீடு ) விதி 1983 துணை விதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. தனியர் பணிக்கு வராத காலம் ஒராண்டிற்கும் மிகையாவதால், 9(1)–ன்கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் விலக்கிகொள்ளப்பட்டு, சென்னை மாநகராட்சி 3(ம) 4–ம் நிலை பணியாளர்கள் ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு துணை விதி 1983 துணை விதி 9(2) ன் கீழ் குற்றச்சாட்டுகள் கீழ் கண்டவாறு சுமத்தப்பட்டது.

<u>குற்றச்சாட்டு–1</u>

திரு.ஆர்.குலம்பராவ், தட்டச்சர், பணித்துறை (பணியிடம் துணை ஆணையர்(பணிகள்) அலுவலகம் அவர்கள் முன்னறிவிப்பின்றி 21.04.2005 முதல் பணிக்கு வரவில்லை.

<u>குற்றச்சாட்டு –2</u>

திரு.ஆர்.குலம்பராவ், தட்டச்சர் அவர்களுக்கு இவ்வலுவலக குறிப்பாணை (ப.து.ந.க.எண்.அ4/4419/2005 நாள் 04.05.2005) 6.5.2005 அன்று சார்பு செய்யப்பட்டது. இதற்கு தனியர் பதில் விளக்கம் அளிக்கவில்லை. இதனால் தனியருக்கு பணியில் உடனே சேருவதற்கு விருப்பமில்லை.

<u>குற்றச்சாட்டு–3</u>

திரு.ஆர்.குலம்பராவ், தட்டச்சர் அவர்கள் 01.04.2005 முதல் ஒரு வருட காலத்திற்கும் மேலாக முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை பொருட்டு அவருக்கு குடிபழக்கம் உள்ளதா? சிவில் மற்றும் கிரிமினல் ஏதும் புரிபவரா? நிர்வாக தரப்பிற்கு சந்தேகங்கள் எழுவதுடன், அவரது ஒழுங்கீனத்தை காட்டுவதுடன் சக ஊழியர்களுக்கு தவறான எடுத்துக்காட்டாக உள்ளது.

<u>குற்றச்சாட்டு–4</u>

திரு.ஆர்.குலம்பராவ், தட்டச்சராகிய தாங்கள் சமர்ப்பித்துள்ள 23.11.2005 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கதவு எண். 713, 6வது பிளாக் முகப்பேர், சென்னை–58 விலாசத்திற்கு ஏற்கனவே அனுப்பிய சாதாரண கடிதம், பதில் தபால் கடிதம் நாட்கள் முறையே 06.5.2005, 10.5.2005, 19.7.2005, 28.9.2005, 14.8.2006 யாவும் " நபர் இல்லை " என்ற வகையில் துறைக்கு திரும்பியுள்ளது. எனவே கடிதங்கள் பெற தவறியது.

தனியர் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு 24.01.2007 அன்று அளித்த விளக்கத்தில் தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும், மன உளைச்சல் காரணமாகவும் பணிக்கு வரஇயலவில்லையென தெரிவித்து தன்னை மன்னித்து குற்றச்சாட்டுகளை கைவிடுமாறு கோரியுள்ளார். விதிகளின்படி நேர்முக விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இதனிடையில் தனியரது கோரிக்கையை ஏற்று 04.09.2006 முதல் மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டார்.

விசாரணை அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகளில் முதல் இரண்டு குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்படுகிறது என்றும் மூன்று மற்றும் நான்காவது குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்படவில்லை என்று விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளார்.

விசாரணை அறிக்கைக்கு தனியர் தன் கூடுதல் விளக்கத்தில், **(குற்றச்சாட்டு–1க்கு)** குடும்ப பிரச்சனை காரணமாகவும், மன உளைச்சல் மற்றும் மனநிம்மதியின்மை காரணமாகவும் அலுவலகத்திற்கு உரிய தகவல் தெரிவிக்க முடியாமல் பணிக்கு 21.04.2005 முதல் பணிக்கு வர இயலாத சூழ்நிலை ஏற்ப்பட்டது எனவும், **(குற்றச்சாட்டு–2க்கு)** கூடுதல் விளக்கத்தில் 06.05.2005 அன்று சார்பு செய்யப்பட்ட குறிப்பாணைக்கு தான் 14.07.2005 கடிதத்திற்கு விளக்கம் 24.11.2005 அன்று சமர்ப்பித்து தன்னை பணியில் சேர அனுமதி தருமாறு கோரியும், 20.12.2005 குறிப்பாணைக்கு 22.12.2005ல் சமர்ப்பித்து தன்னை மன்னித்து பணியில் சேர அனுமதிக்குமாறு கேட்டு கொண்டு இந்த விளக்கத்தை விசாரணை அலுவலர் அளித்த அறிக்கைக்கு கூடுதல் விளக்கமாக ஏற்குமாறும் கோரியிருந்தார். **(குற்றச்சாட்டு–3ற்கு)** கூடுதல் விளக்கத்திற்கு விசாரணை அலுவலர்

**ப.து.ந.க.எண்.அ4/4419/2005**

மூன்றாவது குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளதால் தான் விளக்கம் அளிக்கவில்லை என தெரிவித்திருந்தார். மேலும் **(குற்றச்சாட்டு–4க்கு)** கூடுதல் விளக்கத்திற்கு விசாரணை அலுவலர் நான்காவது குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளதால் தான் விளக்கம் அளிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டு தன் குடும்ப சூழ்நிலை காரணமாகவே 21.04.2005 முதல் 03.09.2006 வரை அலுவலகத்திற்கு முன்னறிவிப்பின்றி பணிக்கு வர இயலாமை ஏற்பட்டது எனவும், தன் குடும்ப பிரச்சனை காரணமாகவே மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளேன் மற்றபடி தான் பணியில் சேர்ந்த நாளான 17.12.1996 முதல் 21.04.2005 வரை எந்தவித குற்றச்சாட்டுகள் இல்லாமல் பணியாற்றி உள்ளேன் எனவும், மற்றும் இனிவரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் நேராவண்ணம் நடந்து கொள்வேன் எனவும், உறுதியளித்து தன்னை மன்னித்து மேற்கண்ட குற்றச்சாட்டிகளிலிருந்து விடுவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தனியர் மீதான குற்றச்சாட்டுகள், விளக்கம், விசாரணை அறிக்கை, கூடுதல் விளக்கம் ஆகியவை கூர்நோக்குடன் பரிசீலிக்கப்பட்டது. விசாரணையில் தனியர் மீதான முதல் இரண்டு குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையில் நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக திரு.ஆர்.குலம்பராவ், தட்டச்சர், பணித்துறை (தற்போது பொதுத்துறை பணியிடம் சட்டக்குழுமம்) அவர்களது ஆண்டு ஊதிய உயர்வை திரண்ட பயனின்றி ஓராண்டுக்கு நிறுத்தம் செய்து ஆணையிடப்பட்டது மேலும் தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதகாலம் (21.04.2005 முதல் 03.09.2006 வரை) ஓராண்டை கடந்துள்ளதால் அ.வி.18(2)ன் கீழ் அரசின் தளர்வாணை பெற்று பின்னர் வரன்முறைப்படுத்தப்படும் என்று ஆணையர் அவர்களின் 19.09.2007 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது. இவ்வாணையின் மீது தனியருக்கு ஆட்சேபணை ஏதுமிருப்பின் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 60 நாட்களுக்குள் தலைவர், நியமனக்குழு அவர்களுக்கு மேற்முறையீடு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டது.

ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின் மீது தலைவர், நியமனக்குழு அவர்களுக்கு மேல்முறையீடு ஏதும் செய்ய போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

எனவே, திரு.ஆர்.குலம்பராவ், தட்டச்சர் அவர்கள் 21.04.2005 முதல் 03.09.2006 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ன் கீழ் அரசின் தளர்வாணை பெற்று வரன்முறை செய்யகோரி அரசுக்கு முன்மொழிகள் அனுப்ப நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ப.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

வ.து.ந.க.எண்.அ1/11303/2007
ஆணையாளர் அவர்களின் 17.10.2007 நாளிட்ட குறிப்பு

28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.611/2007 பொருள் எண்.59

பணியமைப்பு – தகுதிகாண் பருவம்

அரசாணை எண்.185 ந.நி.ம.கு.வ.து. நாள்.02.06.2006ல் பின்வரும் அலுவலர்களுக்கு உதவி வருவாய் அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதை தொடர்ந்து அவரவர் பெயருக்கு எதிரே குறிப்பிட்ட தேதி முதல் ஆணையாளர் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/34575/04 நாள்.13.09.2006ன் படி பணிவரன் முறைப்படுத்தப்பட்டது.

| வ. எண் | பெயர் /பதவி | உதவி வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்த நாள். | பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாள். |
|---|---|---|---|
| 01 | திரு.கே.தங்கப்பழம் வரி மதிப்பீட்டாளர் | 05.09.2005 மு.ப | 05.09.2005 மு.ப |
| 02 | திரு.டி.ஜெ.சூரியநாராயணராவ் வரிமதிப்பீட்டாளர் | 05.09.2005 மு.ப | 05.09.2005 மு.ப |
| 03 | திரு.எம்.சி.கோபாலரத்தினம் வரிமதிப்பீட்டாளர் | 05.09.2005 மு.ப | 05.09.2005 மு.ப |
| 04 | திரு.சி.வெங்கடேசன் வரிமதிப்பீட்டாளர் | 05.09.2005 மு.ப | 05.09.2005 மு.ப |
| 05 | திரு.டி.பி.உதயகுமார் வரிமதிப்பீட்டாளர் | 05.09.2005 மு.ப | 05.09.2005 மு.ப |
| 06 | திரு.ஏ.வஜித்கான் வரிமதிப்பீட்டாளர் | 05.09.2005 மு.ப | 05.09.2005 மு.ப |

மேற்படி பட்டியலில் இடம் பெற்றுள்ள வ.எண்.2லுள்ள திரு.டி.ஜெ.சூரிய நாராயணராவ் என்பவர் 28.02.2006 அன்று ஓய்வு பெற்றார். வ.எண்.6லுள்ள திரு.ஏ.வஜித்கான் என்பவர் 06.03.2007 முதல் 06.04.2007 வரை தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு அக்காலத்தினை வரண்முறைப்படுத்த தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி உதவி வருவாய் அலுவலர்களில் வ.எண்.2 மற்றும் 6 தவிர அவர்கள் வகித்து வரும் பதவியில் இரண்டாண்டு காலம் தகுதி பணிபுரிந்துள்ளதால் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க வேண்டியுள்ளது. இவர்கள் வகித்து வரும் பதவி வகுப்பு–2ஐ சார்ந்துள்ளதால் சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 85(3) (b)ன் படி மன்றத்தின் அனுமதி பெற்று இவர்களுக்கு தகுதிகாண் பருவ உரிமை வழங்க இயலும்.

எனவே, பின்வரும் பட்டியலின்படி உதவி வருவாய் அலுவலர்கள் அவரவர் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதி முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் /பதவி | உதவி வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்த நாள். | தகுதிகாண் பருவ காலம் முடித்த நாள் | தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க வேண்டிய நாள். |
|---|---|---|---|---|
| 01 | திரு.கே.தங்கப்பழம் | 05.09.2005 மு.ப | 04.09.2007 பி.ப | 05.09.2007 மு.ப |
| 02 | திரு.எம்.சி.கோபாலரத்தினம் | 05.09.2005 மு.ப | 04.09.2007 பி.ப | 05.09.2007 மு.ப |
| 03 | திரு.சி.வெங்கடேசன் | 05.09.2005 மு.ப | 04.09.2007 பி.ப | 05.09.2007 மு.ப |
| 04 | திரு.டி.பி.உதயகுமார் | 05.09.2005 மு.ப | 04.09.2007 பி.ப | 05.09.2007 மு.ப |

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.இ1/2389/2006**
**ஆணையாளர் அவர்களின் 19.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.612/2007 பொருள் எண்.60

**பணியமைப்பு – தேர்வு நிலை ஊதியம் வழங்க அனுமதி**

கட்டடத்துறையில் செயற் பொறியாளராக பணியாற்றிய திரு.ஆர்.ராஜேந்திரன் என்பவர் 28.2.2005ல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். இவர் தனக்கு உதவி செயற் பொறியாளர் பதவியில் தேர்வு நிலை ஊதியம் நிர்ணயம் செய்ய விண்ணப்பித்துள்ளார்.

இதன் மீது தெரிவிப்பது யாதெனில் திரு.ஆர்.ராஜேந்திரன், வில்லிவாக்கம் நகர பஞ்சாயத்து அலுவலகத்தில் நகரமைப்பு மற்றும் கட்டிட ஆய்வாளராக 1.4.68 அன்று பணியில் சேர்ந்தார். இப்பதவியில் 1.4.1968 முதல் பணிவரன்முறைப்படுத்தி 31.3.70 பி.ப. தகுதிகாண் பருவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பின்னர் மாற்றுப் பணியில் சென்னை மாநகராட்சியில் ஓவர்சீயராக பணியமர்த்தப்பட்டு 8.7.73 அன்று பணியில் சேர்ந்துள்ளார். வில்லிவாக்கம் நகர பஞ்சாயத்து சென்னை மாநகராட்சியுடன் 1.6.78 முதல் இணைக்கப்பட்ட பின் இளநிலை பொறியாளராக பணியமர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் பி.ஈ. படிப்பை முடித்ததின் காரணமாக 30.11.78 முதல் உதவி பொறியாளர் என பதவி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து 10 ஆண்டுகள் உதவி பொறியாளர் பதவியில் பணியாற்றியதின் அடிப்படையில் 30.11.1988 முதல் தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு 7.6.91 பணியில் சேர்ந்துள்ளார். இப்பதவி 7.6.1991 முதல் பணி வரன்முறை செய்து ஆணையரின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/36102/98 நாள்.17.8.2002ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தேர்வுநிலை உதவி பொறியாளர் பதவி ஊதிய விகிதமும், உதவி செயற் பொறியாளர் பதவியின் சாதாரண நிலை ஊதிய விகிதமும் ஒன்றே என்பதால், அரசாணை நிலை எண்.57, நிதி துறை, நாள்.28.1.91ல் தெரிவித்துள்ள கருத்துருபடி, தனியர் உதவி பொறியாளராக பதவி உயர்வு பெற்ற நாள் 30.11.78 முதல் 20 ஆண்டுகள் கணக்கிட்டு 30.11.98 அன்று உதவி பொறியாளர் பதவியின் சிறப்பு நிலையில் ரூ.10000–325–15200 எனும் ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்யப்படும் ஊதியத்தை கருத்தியலாக கணக்கிட்டு 6வது ஊதியக் குழு விதி4(3)ன் படி உதவி செயற் பொறியாளரின் சாதாரண நிலையில் ரூ.8000–275–13500 எனும் ஊதிய விகிதத்தில் பொருந்தக் கூடிய நிலையில் ரூ.10200/– என உதவி செயற் பொறியாளர் பதவியில் 30.11.98 முதல் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது.

ஓய்வு பெற்ற செயற் பொறியாளர் திரு.ஆர்.ராஜேந்திரன் அவர்களின் ஊதியத்தை, அரசாணை நிலை எண்.210, பணியாளர் மற்றும் சீர்திருத்தத் துறை நாள்.11.03.87ல் தெரிவித்துள்ளவாறு, கீழ் நிலை பணியின் தேர்வு நிலை ஊதிய விகிதமும், உயர் பதவியின் சாதாரண நிலை ஊதிய விகிதமும் ஒன்றாக இருப்பின் கீழ்நிலை பதவியின் பணிக்காலத்தை உயர் பதவியில் தேர்வு நிலை கணக்கிட எடுத்துக் கொள்ளலாம் என்பதால், தனியரின் பணி உதவி செயற் பொறியாளர் பதவியில் 7.06.91 முதல் பணிவரன் முறை செய்யப்பட்டிருப்பினும், உதவி பொறியாளர் பதவி தேர்வு நிலை ஊதிய விகிதமும், உதவி செயற் பொறியாளர் பதவியின் சாதாரண நிலை ஊதிய விகிதமும் சமமாக இருப்பதால், உதவி பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்ட நாள்.30.11.88 முதல் பத்தாண்டுகள் கணக்கிட்டு 30.11.98 முதல் உதவி செயற் பொறியாளர் பதவியின் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.9100 – 275 –14050ல் புக அனுமதித்து, உதவி பொறியாளர் பதவியின் தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் 30.11.98 அன்று பெற்ற ஊதியமான ரூ.10,200/–ன் அடிப்படையில் ரு.10,475/– என உதவி செயற் பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் 30.11.98 முதல் ஊதியம் நிர்ணயம் செய்யலாம்.

உதவி செயற் பொறியாளர் பதவி சென்னை மாநகராட்சி பணிப்பிரிவில் வகுப்பு இரண்டின் கீழ் வருவதால், தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

எனவே கட்டடத்துறையில் செயற் பொறியாளராக பணியாற்றி 28.2.2005ல் ஓய்வு பெற்ற திரு.ஆர்.ராஜேந்திரன், அவர்களுக்கு, உதவி பொறியாளர் பதவியில் தேர்வு நிலை ஊதிய விகிதமும் உதவி செயற் பொறியாளரின் சாதாரண நிலை ஊதிய விகிதமும் சமம் என்பதால், உதவி பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதியம் நிர்ணயிக்கப்பட்ட நாள்.30.11.88 முதல் பத்தாண்டுகள் கணக்கிட்டு 30.11.98 முதல் உதவி செயற் பொறியாளர் பதவியின் தேர்வு நிலை ஊதிய விகிதத்தில் புக அனுமதித்து, ரூ.9100 – 275 –14050 எனும் தேர்வு நிலை ஊதிய விகிதத்தில் ரூ.10475/– என ஊதியம் நிர்ணயம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்.4/0556/07**
**ஆணையாளர் அவர்களின் 16.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.613/2007 பொருள் எண்.61

**பணியமைப்பு – பணிவரன்முறைப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் காலியாக உள்ள இரண்டு மாவட்ட குடும்ப நல மருத்துவர் பணியிடங்களை நிரப்புவதற்கு மூப்பு நிலையில் உள்ள முதல் இரண்டு மண்டல அலுவலர்களான டாக்டர். திருமதி.பி. சாந்தகுமாரி மற்றும் டாக்டர். திருமதி. பி.எஸ். சித்ரகலா ஆகிய இருவருக்கும் தற்காலிகமாக அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.10,000–325–15200 என்ற காலமுறை சம்பள விகிதம் மற்றும் இதரப் படிகளுடன் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கியதற்கு மன்றத் தின் அனுமதி 28.05.07 நாளிட்ட தீர்மான எண். 205/07ல் வழங்கியுள்ளது. இவ்வனுமதியை தொடர்ந்து, இவ்விருவரும் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்களாக 06.06.07 அன்று முற்பகல் பணியேற்றனர்.

டாக்டர் திருமதி.பி சாந்தகுமாரி மற்றும் டாக்டர் திருமதி. பி.எஸ். சித்ரகலா ஆகிய இருவருக்கும் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்களாக பதவி உயர்வு அளித்து ரூ.10,000–325–15200 என்ற கால முறை சம்பள விகிதம் மற்றும் இதரப் படிகளுடன் 6.6.2007 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டது. அரசின் உறுதியாக்கம் அரசாணை (ப) எண், 471, நகராட்சி நிர்வாகம். ( மா.ந.3 ) குடி நீர் வழங்கல் துறை நாள், 08.10.07ல் வழங்கியுள்ளது.

இதனை தொடர்ந்து இவ்விரண்டு அலுவலர்களுக்கு மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் பணி வரண் முறை செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

எனவே, டாக்டர் திருமதி.பி. சாந்தகுமாரி மற்றும் டாக்டர் திருமதி.பி.எஸ். சித்ரகலா ஆகிய இருவருக்கும் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் 6.6.2007 முதல் பணி வரன்முறை செய்வதற்கு நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**வ.து.ந.க.எண்.அ1/12614/2007**
**ஆணையாளர் அவர்களின் 15.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.614/2007 பொருள் எண்.62

**பணியமைப்பு –பணிவரன் முறைப்படுத்துதல்**

மன்றத் தீர்மான எண்.312/07 நாள்.22.06.2007ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான இறுதி தெரிவுப் பட்டியலிலிருந்து திரு.எம்.நாமதேவ், உதவி வருவாய் அலுவலர் அவர்கள் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு கூடுதல் வருவாய் அலுவலராக ரூ.12000–375–16500 என்ற சம்பள விகிதத்தில் திரு.டி.எஸ்.ராஜன், கூடுதல் வருவாய் அலுவலர் அவர்கள் 30.06.2007ல் வயது முதிர்வு ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட்டு 03.07.2007 நாளிட்ட ஆணையரின் செயல்முறை ஆணைப்படி கூடுதல் வருவாய் அலுவலராக பணிநியமனம் செய்யப்பட்டார். இவர் 11.07.2007 முற்பகல் முதல் கூடுதல் வருவாய் அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

16.10.2007 நாளிட்ட அரசாணை எண்.498 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் உதவி வருவாய் அலுவலர் திரு.எம்.நாமதேவ், என்பவருக்கு, கூடுதல் வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கியதற்கு அரசு உறுதியாக்கம் வழங்கி உள்ளது. இவ்வரசாணையினை தொடர்ந்து தனியரது பணி கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். கூடுதல் வருவாய் அலுவலர் பதவி வகுப்பு–1(ஆ)ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் மன்றத்தின் அனுமதி பெற்றே பணிவரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, திரு.எம்.நாமதேவ், கூடுதல் வருவாய் அலுவலர், பதவியில் பொறுப்பேற்றுக் கொண்ட நாள்.11.07.2007 முற்பகல் முதல் பணிவரன் முறைப்படுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/2320/2007</u>
<u>ஆணையாளர் அவர்களின் 16.11.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.615/2007 பொருள் எண்.63

<u>பணியமைப்பு – தடையின்மை சான்று வழங்க அனுமதி</u>

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, அசோக் நகர், நலவாழ்வு மையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர் திருமதி.எம்.பி.எம்.நாச்சியார் அவர்கள் 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்க நாட்டில் தன் மகனை காண அந்நாட்டுக்கு செல்ல தடையின்மை சான்று அளிக்குமாறும் மற்றும் பயணம் செல்வதற்கு 17.12.2007 முதல் 15.3.2008 வரை 90 நாட்கள் ஈட்டிய விடுப்பு அளிக்குமாறு வேண்டியுள்ளார்.

ஏற்கனவே டாக்டர் திருமதி.எம்.பி.எம்.நாச்சியார், மருத்துவ அலுவலர் கடவு சீட்டு பெறுவதற்கு ஆணையாளரிடம் 03.01.2006ல் அனுமதி வழங்கியுள்ள நிலையில் தனியர் 26.12.2005 கடவு சீட்டு முறையான அனுமதி பெறப்படாமல் துறைத்தலைவர் அளித்த கடிதம் மூலம் கடவு சீட்டு பெற்றுள்ளார். தற்போது இந்நிகழ்விற்கு ஆணையர் அவர்கள் ஏற்பு வழங்கியுள்ளார்கள்.

டாக்டர் திருமதி.எம்.பி.எம்.நாச்சியார் மருத்துவ அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் 18.2.85 முதல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார். தனியரது பணி 18.2.85 வரன்முறைப்படுத்தப்பட்டு 19.2.87 முதல் தகுதி காண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறையில் தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி, விழிப்பு பணி அலுவலகத்திலும் காவல்துறை கண்காணிப்பாளர் (பாதுகாப்பு பிரிவு குற்ற புலனாய்வு) துறையிடமிருந்து விசாரணை ஏதும் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது. அரசு பணியாளர்கள் அயல்நாடு பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்க கடைபிடித்தொழுகும் நிபந்தனைகளை கடைபிடித்து இவருக்கு தடையின்மை சான்று வழங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு 2ன் கீழ் வகைப்படுப்பட்டுள்ளதால், தனியர் வெளிநாடு செல்ல மாமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு தடையின்மை சான்று அரசாணை எண் 288 ப.ம.நி.சீ. துறை நாள் 4.12.97ன்படி பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்துக்கொள்ளக்கூடாது.

01. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இதுபோன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
02. வெளிநாடு செல்லும் பயணச்செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
03. அவர் வெளிநாட்டில் இருக்கும்போது சென்னை மாநகராட்சியின் பணியைத் துறக்க விண்ணப்பிக்கக்கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்பட மாட்டாது.
04. வெளிநாடு செல்வதற்கு முன் தனியருக்கு தகுதியுள்ள விடுப்புகள் துய்க்க அனுமதி வேண்டி விண்ணப்பித்த அவ்விடுப்பு அனுமதி அளித்த பிறகே அவர் வெளிநாடு செல்ல வேண்டும்.
05. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையர் அவர்களின் முன்னனுமதியின்றி வேறு வெளிநாடு பயணம் மேற்கொள்ளக்கூடாது.
06. இவ்வாணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு மட்டும் செல்லத்தக்கது.

மேலும் தனியரின் பயணச்செலவினை அவரது மகன் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். மேற்கண்ட நிபந்தனைகளுடன், இவ்வலுவலருக்கு வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் அவர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு செல்வதற்கு தடையின்மை சான்றிதழ் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ2/49283/07**

**ஆணையாளர் அவர்களின் 19.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.616/2007 பொருள் எண்.64

**பணியமைப்பு**

31.08.1994 அன்று ஓய்வுப்பெற்ற வரிமதிப்பீட்டாளர் திரு.ஜி. நாரப்பரெட்டி என்பவரால் தொடரப்பட்ட நீதிபேராணை மேல்முறையீட்டு மனு எண்.342/2005ல் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள 12.03.2007 தேதியிட்ட தீர்ப்பில், " மேல்முறையீட்டுதாரர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லாத போது சென்னை மாநகராட்சியில் சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.3078/92, நாள் 11.12.1992 மற்றும் 16.12.1992 தேதியிட்ட ஆணையரது ஆணையினை செயல்படுத்தி மேல்முறையீட்டுதாரருக்கு கருத்தியலாக உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு வழங்க தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது ".

இந்நீதிமன்ற உத்தரவினை செயல்படுத்த கோரி ஓய்வுப்பெற்ற வரிமதிப்பீட்டாளர் திரு.ஜி. நாரப்பரெட்டி என்பவர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளார்.

சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.3078/92, நாள் 11.12.1992ல், ஊட்ட பதவியில் (வரிமதிப்பீட்டாளர் பதவி) தகுதிவாய்ந்த 10 நபர்களைக்கொண்டு உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. அத்தெரிவுப்பட்டியலில் திரு.ஜி. நாரப்பரெட்டி என்பவரது பெயர் வரிசை எண்.1ல் இடம்பெற்று, இவருக்கு 16.12.1992 தேதியிட்ட ஆணையரது செயல்முறை ஆணையின்படி உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது.

திரு.ஜி. நாரப்பரெட்டி என்பவர் மீது வரிமதிப்பீட்டு குறித்து சில குறைபாடுகளின் காரணமாக மேற்படி உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.992/93, நாள் 12.03.1993ன்படி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. பின்னர், இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு கடுங் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதால், இவரது பெயரினை தவிர்த்து உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.3112/93, நாள் 12.07.1993ன்படி திருத்தியமைக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற வரிமதிப்பீட்டாளர் திரு.ஜி. நாரப்பரெட்டி என்பவரது பணிக்காலத்தில் 6வது மண்டலத்திற்குட்பட்ட சொத்துக்களுக்கு வரிமதிப்பீட்டில் குறைபாடுகள் காரணமாக இவர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983 விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 25.05.1993 தேதியிட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு இவர் அளித்த விளக்கம் ஏற்கத்தகுந்ததாக இல்லாததால் 28.06.1993 தேதியிட்ட ஆணையின்படி இவர் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டார். பின்னர் ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமுமின்றி மீண்டும் பணியில் சேர 12.07.1994 தேதியிட்டு ஆணை வழங்கப்பட்டது.

தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்ததால், இவரை வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்கப்படாமல் ஒழுங்கு நடவடிக்கையின் மீது இறுதி ஆணைக்குட்பட்டு பதவியிலிருந்து மட்டும் 31.08.1994 அன்று விடுவிக்கப்பட்டார். இவர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபணமானதால் இவ்வொழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக 29.08.1994 முதல் பணிநீக்கம் செய்யப்பட்டார். (செயல்முறை நாள் 20.07.1996)

தனியர் அளித்த மேல்முறையீட்டு மனு நியமனக்குழுவால் பரிசீலிக்கப்பட்டு, நியமனக்குழு தீர்மான எண்.397/98, நாள் 18.11.1998ல், திரு.ஜி. நாரப்பரெட்டி என்பவரை 31.08.1994 அன்று வயது முதிர்வில் செல்லவும், தற்காலிக பணிநீக்க காலத்தை தகுதியுள்ள விடுப்பாக கருதவும், இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஒரு பகுதி நிரூபணம் ஆகியுள்ளதால், இவரது ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.100/– வீதம் ஓராண்டிற்கு பிடித்தம் செய்ய அரசுக்கு முன்மொழிவு அனுப்பவும் நியமனக்குழுவால் தீர்மானிக்கப்பட்டது.

அரசு கடித எண்.23135/மாந3/2000, ந.நி.ம.கு.வ.து., நாள் 05.07.2002ல் ' The order of removal was issued to him after he has crossed the age of superannuation. Further, the order was given retrospective effect i.e. 29.08.1994. The order of removal to be valid should have been preceded by his suspension before he has crossed the age of superannuation. Based on the decision of the Appointment Committee, the individual was allowed to retire from service with effect from 31.08.1994 A.N. In the retirement order he was allowed to retire without any condition.

In this case the question of imposing punishment of cutting pension will arise only at the time of issue of final orders on the conclusion of disciplinary proceedings and such punishment cannot be given with restrospective effect.

**பொ.து.ந.க.எண்.ஈ2/49283/07**

In view of the above position it is not possible for the Government to impose a cut in pension of Rs.100/- p.m. for a period of one year to Thiru.G. Narappa Reddy who was allowed to retire w.e.f. 31.08.1994 without any condition ' என்று அரசு தெரிவித்துள்ளதை தொடர்ந்து, இவ்விவரத்தினை நியமனக்குழுவின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. (நியமனக்குழு தீர்மான எண்.13/2003, நாள் 21.01.2003ல் இதனை பதிவு செய்துள்ளது).

மேற்படி அரசு கடிதத்தின் அடிப்படையில் 25.03.2003 தேதியிட்ட ஆணையரது செயல்முறை ஆணையில், தனியரது ஓய்வூதியத்தில் மாதம் ரூ.100/—ஐ ஓராண்டு காலத்திற்கு பிடித்தம் செய்ய உத்தேசிக்கப்பட்ட தண்டனை கைவிடப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தனியர் மீது ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் விதிக்கப்பட்ட தண்டனை அரசால் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின்படி கைவிடப்பட்டுள்ள நிலையில், தனியரால் தொடரப்பட்ட நீதிபேராணை மேல்முறையீட்டு எண்.342/2005, நாள் 12.03.2007ல் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லாத போது சென்னை மாநகராட்சியில் சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.3078/92, நாள் 11.12.1992 மற்றும் 16.12.1992 தேதியிட்ட ஆணையரது ஆணையினை செயல்படுத்தி தனியருக்கு கருத்தியலாக உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதால், 1992ம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் தனியரது பெயரினை சேர்த்து பரிசீலிக்க வேண்டியுள்ளது.

எனினும், சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.3078/92, நாள் 11.12.1992ல், உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டும், அத்தெரிவுப்பட்டியல் சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.992/93, நாள் 12.03.1993ன்படி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டு, பின்னர் அத்தெரிவுப்பட்டியல் சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.3112/93, நாள் 12.07.1993ன்படி திருத்தியமைக்கப்பட்டுள்ளதால், இத்தெரிவுப்பட்டியலில் மட்டுமே திரு.ஜி. நாரப்பரெட்டி என்பவரது பெயரினை பரிசீலிக்க இயலும்.

அரசாணை எண்.203, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.10.2000ன்படி, பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் தள்ளிவைக்கப்பட்ட அரசு ஊழியர், வயது முதிர்வின் காரணமாக ஓய்வுபெற்ற பின்னர், அரசின் பரிசீலனைக்குப் பின்னர் தகுதி மற்றும் முதுநிலை அடிப்படையில் ஓய்வு பெறுவதற்கு முந்தைய பட்டியலில் சேர்க்கப்படுவார்களேயானால், அத்தகையோருக்கு இளையோர் பதவி உயர்வு பெற்ற நாளை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பணப்பயன்கள் அனைத்தும் அடையும் பொருட்டு, அடிப்படை விதி 27ன் முறைமை (17)ன் கீழ் ஓய்வு பெற்ற நாளன்று கருத்தியலாக (Notional) ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.

எனவே, மேற்படி அரசாணை மற்றும் அடைப்படை விதியின்படி 1992ம் ஆண்டில் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கு, சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.3112/93, நாள் 12.07.1993ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட தெரிவுப்பட்டியலில் திரு.ஜி. நாரப்பரெட்டி என்பவரை மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஆணையரின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/49283/07, நாள் 15.11.2007ன்படி கருத்தியலாக உதவி வருவாய் அலுவலராக ரூ.2200—75—2800—100—4000 என்ற காலமுறை ஊதிய விதிகத்தில் பதவி உயர்வு (Notionally promoted) அளித்து, இவரது மூப்பினை மேற்படி சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மானத்தின்படி திருத்தியமைக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலில் வ.எண்.1ல் இடம் பெற்றுள்ள திரு.கே.என். நாராயணன் என்பவருக்கு மேலாக வைத்து திரு.ஜி. நாரப்பரெட்டி என்பவரது பெயரினை வ.எண்.1லும், திரு.கே.என். நாராயணன் என்பவரது பெயரினை வரிசை எண்.1A என்று மறுநிர்ணயம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

அரசாணை எண்.203, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.10.2000ன்படி, இவருக்கு இளையோர் திரு.கே.என். நாராயணன் என்பவர் பதவி உயர்வு பெற்ற நாளான 13.07.1993ஐ அடிப்படையாகக்கொண்டு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பணப்பயன்கள் அனைத்தும் அடையும் பொருட்டு, அடிப்படை விதி 27ன் முறைமை (17)ன் கீழ் ஓய்வு பெற்ற நாளன்று கருத்தியலாக (Notional) ஊதிய நிர்ணயம் செய்ய உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள 6வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ14/39806/2007**
**ஆணையாளர் அவர்களின் 15.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.617/2007 பொருள் எண்.65

**பணியமைப்பு**

சென்னை மாநகராட்சியில் வரைவாளர்(மின்சாரம்) பதவி வகுப்பு=3ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான நியமன அதிகாரம் சென்னை மாநகராட்சி நியமனக் குழு பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜுன் மாதம் 15ம் தேதியாகும். இப்பதவியினை பதவி உயர்வின் மூலம் கீழ்கண்ட வகையில் நிரப்பிட வரைவு சென்னை மாநகராட்சி சார்நிலை பொறியாளர் பணிவிதி, 1981 ல் வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது

| Name of the Post | Method of Recruitment | Qualification |
|---|---|---|
| **Category-11**<br>Draughtsman (Electrical)<br>4500-125-7000 | 1) By Direct Recruitment<br><br>2) By Promotion from the post of Asst. Draughtsman(Electrical) | Diploma in Electrical and Electronics Engineering/Electronics and Communication Engineering/Instrumentation Engineering/Computer Science/Information Technology discipline issued by the Directorate of Technical Education, Govt. of Tamilnadu.<br>or<br>Any other qualification recognised as equivalent thereto by Govt. of Tamilnadu.<br>or<br>5 years of service in the case of fully qualified Assistant Draugtsman(Electrical)<br>or<br>10 years service as Assistant Draughtsman(Electrical) (relates to certificate course holders) |

சென்னை மாநகராட்சியில் வரைவாளர்(சிவில்) பணியிடங்கள் காலியாகயிருந்ததால், நிர்வாக நலன் கருதி இப்பணியிடங்களை பூர்த்தி செய்ய வேண்டியுள்ள நிலையினை கருத்தில்கொண்டு, வரைவாளர்(சிவில்) பதவிக்கு, Diploma in DME/DCE கல்வித்தகுதி பெற்றுள்ளவர்கள் உதவி வரைவாளர் பதவியில் ஐந்து ஆண்டுகாலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என ஏற்கனவே வரைவு பணிவிதியில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கால நிர்ணயத்தினை மாற்றி, சென்னை மாநகராட்சி சார்நிலை பொறியாளர்கள் பணிவிதியின்கீழ் தகுதிகாண் பருவம் முடித்திருக்க வேண்டும் (Probation period is total Period of two years on duty within a continuous period of three years ) என பணிவிதிகளில் மாற்றம் செய்ய சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.452/2007, நாள் 31.08.2007ல் அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, வரைவாளர் பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது.

வரைவாளர்(சிவில்) பதவிக்கான வரைவு விதியில் மாற்றம் செய்யப்பட்டதைப் போன்று ஒத்தபதவியான வரைவாளர்(மின்சாரம்) பதவிக்கான வரைவு விதியிலும் மேற்கண்டவாறு விதித்திருத்தம் செய்யப்படவேண்டும்.

எனவே, வரைவாளர்(மின்சாரம்) பதவிக்கு Diploma கல்வித்தகுதி பெற்றுள்ளவர்கள் உதவி வரைவாளர் பதவியில் ஐந்து ஆண்டுகாலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என ஏற்கனவே வரைவு பணிவிதியில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கால நிர்ணயத்தினை மாற்றி, சென்னை மாநகராட்சி சார்நிலை பொறியாளர்கள் பணிவிதியின்கீழ் தகுதிகாண் பருவம் முடித்திருக்க வேண்டும் (Probation period is total Period of two years on duty within a continuous period of three years ) என பணிவிதிகளில் மாற்றம் செய்ய நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ9.ந.க.எண்.அ6/6792/2000**
**ஆணையாளர் அவர்களின் 12.10.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.618/2007 பொருள் எண்.66

**மன்ற தீர்மானம் ரத்து செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, லாரி நிலையத்தில் ஓட்டுநராக பணியிலிருக்கும் திரு.ஏ.அப்துல் ரசாக் என்பவர், முன்னர், மண்டலம்–10ல் துப்புரவு பணியாளராக மாற்றுப் பணியில் ஓட்டுநராக பணிபுரிந்த போது 24.09.1994 அன்று சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான டி.எம்.எச்–9670 என்ற பதிவு கொண்ட லாரியை ஓட்டிச் சென்று இறப்புக்குறிய விபத்து ஏற்படுத்தியதன் காரணமாக 24.09.1994 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார்.

மேற்கண்ட செயலுக்காக தனியர் மீது சென்னை மாநகராட்சி மூன்று மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணைவிதி 1983–ன் விதி 9(2)ன் கீழ் மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

தனியர் மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் சமர்பித்ததை தொடர்ந்துஅவர் மீதுள்ள ஒழுங்கு நடவடிக்கைக்கு எந்தவித குந்தகமுமின்றி மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டு 16.03.1995 முதல் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

திரு.ஏ.அப்துல் ரசாக் ஓட்டுநர் இறப்பிற்குரிய விபத்து ஏற்படுத்திய செயலுக்காக, காவல் துறையால் மேற்கொள்ளப்பட்ட குற்றவியல் வழக்கு வரிசை எண்.4149/95ன் மீது 4வது பெருநகர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் சைதாப்பேட்டை, சென்னை–15 வழங்கிய தீர்ப்பில் தனியர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு ஒரு வருட மெய்க்காவல் தண்டனையும் ரூ.4750/– அபராதமும் தண்டனையாக வழங்கப்பட்டது இதனடிப்படையில் தனியர் மீண்டும் 26.12.2000 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார்.

குற்றவியல் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் மீது தனியர் மேல்முறையீடு வழக்கு எண்.304/2000ன் மீதான 2–வது கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்தில் 07.02.2002 நாளிட்ட தீர்ப்பில் தனியர் மீதான குற்றங்கள் வாதி தரப்பில் சந்தேகத்திடமின்றி நிரூபிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டவருக்கு சாதமாக்கி தனியர் விடுதலை செய்யப்பட்டார்.

குற்றவியல் வழக்கின் மேல் முறையீட்டில் தனியர் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனியர் மீதான துறை ரீதியிலான ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமுமின்றி மீண்டும் பணியில் சேர அனுமதி அளிக்கப்பட்டு 21.09.2002 முதல் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

தனியர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு 28.07.2004 நாளிட்ட விசாரணை அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. விசாரணை அலுவலர் தனது அறிக்கையில் தனியர் மீதான குற்றச்சாட்டுகளில் முதல் மற்றும் இரண்டாம் குற்றச்சாட்டுகள் நிலைக்கத்தக்கதல்ல எனக்குறிப்பிட்டுள்ளார்.

விசாரணை அறிக்கையின் நகல் தனியருக்கு சார்வு செய்யப்பட்டு அதன் மீதான கூடுதல் விளக்கம் தனியரால் 01.12.2004 அன்று சமர்பிக்கப்பட்டது. தனியர் சமர்பித்துள்ள கூடுதல் விளக்கத்தில் நீதிமன்ற மேல்முறையீட்டில் தாம் குற்றவாளி அல்ல என தீர்ப்பளித்து விடுதலை செய்யப்பட்டு கட்டிய அபாரதத் தொகை ரூ.4750/– திரும்ப பெற்றுக் கொண்டதாகவும் ஆகவே நீதிமன்ற தீர்ப்பின்படி தமக்கு நியாயம் வழங்குமாறும் தெரிவித்துள்ளார்.

தனியர் மீதுள்ள ஒழுங்கு நடவடிக்கையை இறுதி செய்யும் பொருட்டு, தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அக்குற்றச்சாட்டுகளுக்கு தனியர் அளித்த விளக்கம் விசாரணை அலுவலரின் முடிவுகள், விசாரணை அறிக்கையின் மீது தனியர் கூடுதல் விளக்கம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலிக்கப்பட்டு 24.09.1994 அன்று சென்னை மாநகராட்சி லாரி மூலம் இறப்பிற்குரிய விபத்து நிகழ்ந்தது உண்மை அவ்விபத்து ஏற்படக்காரணமாக இருந்த லாரியை அவ்வமயம் ஓட்டிச் சென்றவர் குற்றம் சாட்டப்பட்டவரான திரு.ஏ.அப்துல் ரசாக் என்பதும் உண்மை. எனவே விசாரணை அலுவலரின் முடிவுகள் ஏற்க இயலாத நிலையில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு தண்டனையாக தனியரின் ஊதிய உயர்வினை மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**<u>ம.அ9.ந.க.எண்.அ6/6792/2000</u>**

மேலும் தனியரின் தற்காலிக பணிநீக்க காலம் 24.09.1994 முதல் 15.03.1995 வரை தகுதியுள்ள விடுப்பாக வரன்முறைப்படுத்தி உத்திரவிடப்பட்டுள்ளது. 26.12.2000 முதல் 20.09.2002 வரையிலான தற்காலிக பணிநீக்கம் ஓராண்டிற்கும் மிகைப்படுவதால் அரசின் தளர்வாணை பெற்று பின்னர் வரன்முறைப்டுத்தப்படும் என ஆணையில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து திரு.எ.அப்துல் ரசாக் ஓட்டுநரின் தற்காலிக பணிநீக்க காலமான 26.12.2000 முதல் 20.09.2002 வரையில் வரன்முறைப்படுத்த ஓராண்டிற்கும் மிகைப்படுவதால் அரசின் தளர்வாணை பெற நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் தீர்மானம் எண்.365/06 நாள்.31.08.2006 வாயிலாக அனுமதி பெறப்பட்டது.

தனியரின் தற்காலிக பணிநீக்க காலம் அரசின் தளர்வாணை பெறுவதற்காக அரசுக்கான வரைவு கடிதத்தின் மீது உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 21.04.2007 நாளிட்ட குறிப்பில் தனியர் தற்காலிக பணிநீக்க காலத்தினை வரன்முறைபடுத்த அரசின் தளர்வாணை வேண்டி அரசுக்கு அனுப்பவிருக்கும் வரைவு கடிதத்தில், மோட்டார் வாகன விபத்து சட்டப்படி தண்டனைக்குரியவரை மீண்டும் பணியில் சேர்க்க என்ன நடைமுறை பின்பற்றப்படுகிறது. என்பதற்கு சட்ட அலுவலரின் கருத்து கேட்டு அனுப்பும்படி கோரியதைத் தொடர்ந்து சட்ட அலுவலர் அவர்களின் 03.05.2007 நாளிட்ட கருத்துரை பெறப்பட்டது. அதில் தனியரின் தற்காலிக பணிநீக்க காலமான 26.12.2000 முதல் 20.09.2002 வரையிலான காலம் ஓராண்டிற்கு மேற்படுவதால் அடிப்படை விதி 54ன்படி தற்காலிக பணி நீக்க காலத்தை வரன்முறைபடுத்த ஆணையரின் ஒப்புதல் பெறலாம் ஆணையரின் ஒப்புதல் பெற்ற பின் தகுதியுள்ள விடுப்பாக வரன்முறைபடுத்தலாம். அன்னாரின் தற்காலிக பணிநீக்க காலத்தை வரன்முறைபடுத்தி அரசின் தளர்வாணை பெற அடிப்படை விதி 18(2) என்பது இவ்வினத்திற்கு பொருந்தாது. இவ்விதி முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்திற்கு மட்டுமே பொருந்தும் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, திரு.எ.அப்துல் ரசாக், தற்போது ஓட்டுநர், மண்டலம்–9, அவர்கள் முன்னர் மண்டலம்–10ல் துப்புரவு பணியாளர் மாற்றுப்பணியில் ஓட்டுநர் அவர்களின் 26.12.2000 முதல் 20.09.2002 வரையிலான தற்காலிக பணி நீக்க காலத்தை வரன்முறைப்படுத்த அரசின் தளர்வாணை பெறுவதற்கு நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்ட தீர்மானம் எண்.365/2006 நாள்.31.08.2006ஐ ரத்து செய்வதற்கு நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.டி1/225/2007**
**ஆணையாளர் அவர்களின் 23.10.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.619/2007 பொருள் எண்.67

**பணியமைப்பு - சென்னை மாநகராட்சி, தொழிற் பயிற்சி நிலைய அலுவலர்களுக்கு பணி நீட்டிப்பு**

அரசாணை எண் 292ன்படி, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் சமுதாய இட ஒதுக்கீடு சுழற்சி முறையில் தொழிற் பயிற்சி நிலைய பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் கால சம்பள ஏற்ற முறையில் குறைந்த பட்ச சம்பளம் தொகுப்பூதியமாக பணியமர்த்த கூறப்பட்டுள்ளது. அதன்படி மன்றத் தீர்மானம் எண் 393/2006 நாள் 31.08.2006 மற்றும் மன்றத் தீர்மானம் எண் 437/2006 நாள் 31.08.2006 படி, கீழ்கண்ட பணியாளர்கள் ஒப்பந்த முறையில் பணியமர்வு செய்யப்பட்டு பணி செய்து வருகிறார்கள்.

| வ எண். | பெயர் | பதவி | மாதாந்திர தொகுப்பு ஊதியம் | பணி சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | M.கோவிந்தராஜ் | முதல்வர் | ரூ. 8000/— | 16.11.2006 |
| 2 | S. சுதாகர் | பயிற்சி அலுவலர் | ரூ. 6500/— | 16.11.2006 |
| 3 | R கிரிஜா | இளநிலை பயிற்சி அலுவலர் (COPA - Theory) | ரூ. 5000/— | 01.12.2006 |
| 4 | R மேகலா | இளநிலை பயிற்சி அலுவலர் (COPA - Practical) | ரூ. 5000/— | 01.12.2006 |

மத்திய அரசின் DGE&T -6/22/6/2006-TC நாள் 20.03.2007ல், தொழிற் பயிற்சி நிலைய ஆறுப் பாடப் பிரிவில் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் பாடப் பிரிவுக்கு 40 பயிற்சி மாணவர்கள் சேர்க்கும் பொருட்டு NCVT அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேலும் குழாய் பொருத்துநர் பாடப் பிரிவு தொடங்க (1 அலகுக்கு 20 மாணவர் சேர்க்கை) முதல் கட்ட ஆய்வு முடிந்து இரண்டாம் கட்ட நிலைக்குழு ஆய்வை D.E.T. மூலம் மேற் கொண்டு மத்திய அரசின் NCVT அனுமதி பெற தயார் நிலையில் உள்ளது. இதர நான்கு பாடப் பிரிவிற்கு 1. மின் பணியாளர், ( Electrician), 2. கம்மியர் (மோட்டார் வாகனம்), (Mechanical Motor Vehicle) 3.பொருத்துநர், (Fitter), 4. மின்னணுவியர் (Electronic Mechanic) தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் இயந்திரப் பொறியியல் துறை மற்றும் மின்சாரத்துறை மூலம் கொள்முதல் பணிகள் தொழிற் பயிற்சி நிலையத்தில் தற்போது பணியில் உள்ள ஆசிரியர்கள் மூலம் நடைபெற்று வருகிறது.

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் (COPA) பாடப் பிரிவில் பயிற்சியில் அரசு விதிகளின்படி பயிற்சி மாணவ மாணவியர் சேர்க்கை நடைபெற்று கடந்த 03.08.2007 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் பாடப் பிரிவு தொடங்கி வைக்கப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

கல்வி நிலைய பணியிடம் ஓர் தொடர் நிகழ்வு என்பதால் தொடர்ந்து மாணவ மாணவியர்களுக்கு கல்வி கற்பிக்க ஆசிரியர் பணியிடம் அவசியமாகின்றது, மேலும், சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் தொடர்ந்து சிறப்பான முறையில் இயங்க மேற்கண்ட இவர்களின் பணியிடம் மிகவும் அவசியமாகிறது.

இந்நிலையில்

அ) மேற்கண்ட தொழிற் பயிற்சி நிலைய பணியாளர்களுக்கு அவர்களின் பதவியில், முதல்வர் மற்றும் பயிற்சி அலுவலர் ஆகியோருக்கு 16.11.2007ல் இருந்தும் , கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் பாடப் பிரிவு இளநிலை பயிற்சி அலுவலர்களுக்கு 01.12.2007 ல் இருந்தும் மேலும் ஓராண்டிற்கு ஏற்கனவே செய்த ஒப்பந்த முறையில் பணி நீட்டிப்பு செய்யவும்,

**க.து.ந.க.எண்.டி1/225/2007**

ஆ) மேற்படி தொழிற் பயிற்சி நிலைய பணியாளர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதியசெலவீனம் கல்வித்துறை தொழிற்பயிற்சி நிலையம் (24) 116 நிரந்தரமற்ற பணியாளர்கள் ஊதியம் என்ற தலைப்பின் கீழ் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கவும்,

நிலைக்குழு (கல்வி), (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக் குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது,

"07.11.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண். 93/ 2007 நாள்: 07.11.2007- ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது "

"19.11.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.175/07 நாள். 19.11.2007 –ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)பரிந்துரை செய்து நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: கல்வித்துறை
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.டி1/ 206/2007**
**ஆணையாளர் அவர்களின் 03.10.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.620/2007 பொருள் எண்.68

**பணியமைப்பு - சமுதாயக் கல்லூரி பணியாளர்களின் பணி நீட்டிப்பும் தொகுப்பூதியத்தை உயர்த்தவும் அனுமதி**

சென்னை மாநகராட்சி , கல்வித்துறையின் கீழ் 4 சமுதாயக் கல்லூரிகள் ( பிப்ரவரி 1999 முதல் 2 கல்லூரிகளும், மார்ச் 1999 முதல் 1 கல்லூரியும், ஆகஸ்டு 1999 முதல் நான்காவது கல்லூரியும்) மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன.

மேற்காண் கல்லூரிகளின் நிர்வாகப் பணிகளை திறம்பட செவ்வனே செய்வதற்கும், மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய நிர்வாகப் பணிகளையும் கூடுதலாக செய்திடவும்,
1 இளநிலை உதவியாளர் ( செல்வி. எம். மகாலெட்சுமி) மற்றும் 1 கணிணி தட்டச்சாளர்
( திருமதி. ஆர். மகாலெட்சுமி) ஆகியோர் பிப்ரவரி 1999 முதலும், 1 அலுவலக உதவியாளர் ( திரு. கே. சேகர்) ஆகஸ்டு 1999 முதலும் அப்போதைய துணை ஆணையர் (கல்வி) அவர்களால் நேரடியாகவும், தற்காலிகமாகவும் தொகுப்பூதிய அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர்.

இம்மூவரின் மாதாந்திரத் தொகுப்பூதியம் மன்றத் தீர்மானம் எண் 363 நாள் 30.09.2002, மன்றத் தீர்மானம் எண் 85 நாள் 21.05.2004, மற்றும் மன்றத் தீர்மானம் எண் 34 நாள் 20.01.2005ன்படி மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து தொடர்ந்து வழங்கப்படுகின்றது. மன்றத்தீர்மானம் எண் 136 நாள் 25.04.2007ன்படி, செல்வி. எம். மகாலெட்சுமி ( இளநிலை உதவியாளர்) மற்றும் ஆர். மகாலெட்சுமி (கணிப்பொறி/ தட்டச்சு இயக்குபவர்) மற்றும் திரு. கே. சேகர் (அலுவலக உதவியாளர்) ஆகிய மூவரும் 01.11.2006 முதல் ஓராண்டு பணி நீட்டிப்புடன், மாதாந்திரத் தொகுப்பூதியம் முறையே ரூ.3500/–, ரூ.3500/– மற்றும் ரூ.1800/–ம் பெற்று வருகின்றனர். இம்மூவரின் பணி காலம் 31.10.2007வுடன் முடிவடையும் நிலையில், பணியின் அவசியம் கருதி, மேலும் ஓராண்டுக்கு 01.11.2007 முதல் தொடர அனுமதி வேண்டப்படுகிறது.

இம்மூவரும் சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரிகளில் தற்போது செயல்பட்டு வரும்,

*“ தேசிய திறந்த நிலைப்பள்ளியின் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சியின் பணிகள் NIOS ( National institute of Open Schooling / accredited Vocational Institute - 690039)“

* சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலை வாய்ப்புத் திட்டம் வழங்கும் தொழிற் பயிற்சிப் பணிகள் – (SJSRY - Vocational Training)

* குறுகிய கால புதிய தொழிற் பாடப் பிரிவுகளான பி.பி.ஓ (BPO) , கஸ்டமர் ரிலேஷன்ஸ் அண்டு சேல்ஸ் ( Customer Relations and Sales ) மற்றும் ஹாஸ்பிடாலிட்டி சர்வீஸ் ( Hospitality Services ) போன்ற பயிற்சிகளின் அலுவலக பணிகளையும் கூடுதலாகச் செய்கின்றனர்.

இக்கூடுதல் பணிப்பளு, 9 ஆண்டுகளுக்கு மேலான பணி அனுபவம் மற்றும் இன்றைய விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டும், தார்மீக அடிப்படையில் தொகுப்பூதியத்தை உயர்த்த வேண்டியும் , கீழ்க்கண்ட மூவருக்கும்,

(1) 01.11.2007 முதல் மேலும் ஓராண்டு பணி நீட்டிப்பு வழங்கவும்,

(2) பணிப்பளு, அனுபவம், தகுதி மற்றும் தற்போதைய விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இம்மூவரின் மாதந்திரத் தொகுப்பூதியத்தை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கவும்,

**க.து.ந.க.எண்.டி1/ 206/2007**

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் கல்வித்தகுதி | பதவி | தொகுப்பூதியம் | | இதர குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | | | வழங்கப்படுவது | உயர்த்த வேண்டுவது | |
| 1 | செல்வி.எம்.மகாலெட்சுமி எம்.ஏ (ஆங்கிலம்), டி.சி.ஏ அரசு நடைமுறை நூல் தேர்ச்சி ( G.O.M) | இளநிலை உதவியாளர் | ரூ. 3500/– | ரூ.4000/– | மிகக் குறைந்த ஊதியம் – குடும்பச் செலவை ஓரளவு ஈடு செய்ய வேண்டியும் மேலும் தற்போதைய விலைவாசியை கருத்தில் கொண்டும் |
| 2 | திருமதி.ஆர்.மகாலெட்சுமி எம்.ஏ(பொருளாதாரம்) டிப்ளமோ இன் ஆபிஸ் ஆட்டோமேசன், தட்டச்சு ( தமிழ், ஆங்கிலம் ) – முதுநிலை, அரசு நடைமுறை நூல் தேர்ச்சி (GOM) | கணிப்பொறி / தட்டச்சு இயக்குபவர் | ரூ.3500/– | ரூ.4000/– | |
| 3 | திரு. கே.சேகர் 8ஆம் வகுப்பு தேர்ச்சி | அலுவலக உதவியாளர் | ரூ.1800/– | ரூ.2100/– | |

(3) மாநகராட்சி வருவாய் நிதி – துறை – கல்வி – பிரிவு 25 – சமுதாயக் கல்லூரி – கணக்குக் குறியீடு எண் – 116 நிரந்தரமற்றப் பணியாளர் ஊதியம் என்றத் தலைப்பில் 2007– 2008க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1,00,000/– லிருந்து, இந்த நிதியாண்டில் மீதம் உள்ள 5 மாதங்களுக்கு( 1.11.2007 –31.3.2008) வேண்டிய தொகை ரூ.50,500/–க்கு சேர்த்து ரூ.1,50,500/– யை திருத்திய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து தொடர்ந்து வழங்குவதற்கும், மன்றத்தின் அனுமதி பெறுவதற்கும்,

நிலைக்குழுக்கள் (கல்வி), மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் (நியமனக் குழு) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"07.11.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண். 87 / 2007 நாள்: 07.11.2007-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது "

"19.11.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.176/07 நாள். 19.11.2007 –ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)பரிந்துரை செய்து நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: கல்வித்துறை
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/4172/2005**
**ஆணையாளர் அவர்களின் 07.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.621/2007 பொருள் எண்.69

**பணியமைப்பு – அயற் பணியில் மருத்துவ அலுவலர் நியமனம் – பின்னேற்பு**

டாக்டர் திருமதி.சுஜானா ஏ.எல்.மானுவேல் என்பவர், மருத்துவ கல்லூரி இயக்குநரகம், சென்னை–10, கட்டுப்பாட்டில் உள்ள அரசு, வேலூர் மருத்துவ கல்லூரியில் ட்டியுடராக (Tutour) பணிபுரிந்து வந்தார். இவர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிய அயற்பணி அடிப்படையில் விருப்பம் தெரிவித்ததையடுத்து, மாவட்ட குடும்ப நலத்துறையில் போதுமான மருத்துவர் இல்லாத காரணத்தினால் மற்றும் பட்டபடிப்பு மருத்துவர் என்ற அடிப்படையிலும் 24 மணி நேர அவசர மருத்துவ சேவைக்கு தனியரை பயன்படுத்திக் கொள்ளலாம் என கருதி ஆணையர் அவர்கள் அனுமதி வழங்கியதின் பேரில் மருத்துவ கல்வி இயக்குநர், சென்னை–10, அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு தனியரை உடனே பணியில் சேருவதற்கு விடுவிக்குமாறு கோரப்பட்டது.

தனியர் 07.08.2006 முதல் தொடர்ந்து சென்னை மாநகராட்சியில் பணியாற்றி வருகிறார். தனியர் அயற்பணி அடிப்படையின் மூலம் 3 வருடங்கள் பணிபுரிவதற்கு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ஆணையர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். அடிப்படை விதி 110(a)ல் வகுப்பு1ஏ, 1பி மற்றும் 2ன் கீழ் வரும் அலுவலர்கள் சென்னை மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையின் மூலம் பணி செய்வதற்கு விதி இல்லை. மேலும் மாநகராட்சி சட்ட விதி 1919 மற்றும் வரையறுக்கப்பட்ட மாவட்ட குடும்ப நலத்துறையின் பணி விதிகளில் மருத்துவ அலுவலர் சென்னை மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் பணி செய்வதற்கு எந்த விதியும் ஏற்படுத்தப்படவில்லை இந்நிலையில் டாக்டர் திருமதி.சுஜானா ஏ.எல்.மானுவேல், மருத்துவ அலுவலர் என்பவர், அயற்பணி மூலம் சென்னை மாநகராட்சியில் 3 வருடங்கள் 07.08.2006 முதல் 06.08.2009 வரை பணி செய்வதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் இந்நிகழ்வுக்கு அரசு சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறையில் தளர்வாணை கோருவதற்கும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>சு.து.ந.க.எண்.சி1/1963/07</u>
<u>ஆணையாளர் அவர்களின் 18.10.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.622/2007 பொருள் எண்.70

<u>மேற்படிப்பு பயில அனுமதித்ததற்கு பின்னேற்பு</u>

டாக்டர்.எஸ்.கிருஷ்ணா, கூடுதல் சுகாதார அலுவலர் (பொ) சென்னை மாநகராட்சி, அவர்கள் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தில் MSc Counseling and Psychotherapy இரண்டாண்டுகள் படிப்பினை பயிலுவதற்கு 12.04.2007 கடிதத்தின் வாயிலாக அனுமதி கோரி கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் 16.07.1987ல் உதவி சுகாதார அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவரது பணி நியமனம் தொடர்பாக அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு 08.05.1990 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு 28.05.1992 முற்பகல் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் உதவி சுகாதார அலுவலர் பதவி வகுப்பு 2ல் சேர்ந்ததாகும். எனவே, தனியரை தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலை கழகத்தில் MSc Counseling and Psychotherapy இரண்டாண்டு படிப்பினை 2007 – 2008ம் ஆண்டிலிருந்து பயிலுவதற்கு மன்றத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

ஆனால் போதிய கால அவகாசம் இல்லாததால் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/1963/2007 நாள்.25.04.2007ன் வாயிலாக அனுமதி ஆணை வழங்கப்பட்டது.

1) தனியர் தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக் கழகத்தில் பயிலும் காலத்தில் சென்னை மாநகராட்சியின் அன்றாட அலுவலக பணிகளுக்கு குந்தகம் ஏதும் ஏற்படும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது.
2) தற்போது அளிக்கும் அனுமதி 2007 – 2008 மற்றும் 2008 – 2009ம் ஆண்டிற்கான கல்வி ஆண்டிற்கு மட்டுமே பொருந்தும்.
3) கல்வி பயிலும் காலத்தில் பணியிட மாற்றம் ஏதும் கோரக்கூடாது.
4) பயின்ற இப்படிப்பிற்காக அலுவலகத்தில் எப்பணியிடத்திற்கும் முன்னுரிமை கோரக்கூடாது.
5) மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் செயலில் ஈடுபட்டால் தங்களுக்கு வழங்கப்படும் அனுமதி ரத்து செய்யப்பட்டு தங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் தனியர் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தில் MSc Counseling and Psychotherapy இரண்டாண்டுகள் படிப்பினை பயிலுவதற்கு அனுமதி அளித்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/4150/2007**
**ஆணையாளர் அவர்களின் 16.11.2007 நாளிட்ட குறிப்பு**

**28.11.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.623/2007 பொருள் எண்.71

**பணியமைப்பு – மருத்துவ அலுவலர் பணி நியமனம் – பின்னேற்பு**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில், தற்பொழுது மருத்துவ அலுவலர் பதவிக்கான 30 பணியிடங்கள் காலியாக உள்ளது.

இப்பதவியினை வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி (அரசாணை எண்.161 நகராட்சி, நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.08.1998) நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். அதன் விவரம் பின்வருமாறு:

| வகுப்பு | பதவியின் பெயர் | காலமுறை ஊதிய விகிதம் | நியமனமுறை வயது வரம்பு | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 2 | மருத்துவ அலுவலர் / உதவி அறுவையாளர் | 8000–275–13500 | நேரடி நியமனம் வயது 35 க்குட் பட்டவராக இருக்க வேண்டும் | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்தால் வழங்கப்பட்ட மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சையில் பட்டம் (M.B.B.S) மகப்பேற்றில் பட்ட மேற்படிப்பு பட்டம் அல்லது பட்டயம் விரும்பதக்கது. |

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2ன் கீழ் வைக்கப்படுத்தப்பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 85(3)(b)ன் படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணி நியமனம் செய்ய மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

அரசாணை எண்.65 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை 30.03.2007ன் படி வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்படும் பட்டியலிருந்து 1:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படவேண்டும்.

அரசாணை எண்.98 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.17.07.06ன் படி பணி நியமனத்திற்கு வயது வரம்பினை மேலும் 5 ஆண்டு காலத்திற்கு நீட்டித்து அரசு தளர்வாணை வழங்கியுள்ளது.

மேற்படி பணி விதிகள் மற்றும் அரசாணைகளின் அடிப்படையில் வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பணி மூப்பு / இன சுழற்சியின்படி தகுதி வாய்ந்த நபர் பட்டியல் 02.11.2007 அன்று பெறப்பட்ட 27 மருத்துவர்களுக்கு Phonagram மூலம் 12.11.07 அன்று நேர்காணலில் கலந்து கொள்வதற்கு தகவல் அனுப்பட்டது. 12.11.07 அன்று நேர்காணலில் கலந்து கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | மருத்துவர் பெயர் மற்றும்வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பதிவு எண். | இனம் | படிப்பு | தாய்மொழி தமிழ்மொழி கல்வி தேர்ச்சி விவரம் | தற்போது வயது | தேர்ந் தெடுக்கப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | M. பாத்திமா, 2000 F 01862 SF 18.02.2000 | B.C | M.B.B.S. D.C.H. | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |
| 02. | B. ஆஷாலதா, 2000 F 03089 SF 28.03.2000 | S.C | M.B.B.S. Diploma Diabetalogy | இந்தி | 36 | ஆம் |
| 03. | அகிலா நடராஜன், 2000 F 03072 SF 27.3.2000 | B.C | M.B.B.S. D.G.O. | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 36 | ஆம் |
| 04. | A. ரஞ்சினிகுமாரி, 2000 F 09694 SF 29.8.2000 | M.B.C | M.B.B.S. D.G.O. | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |
| 05. | N. சியாமளா, 2001 F 10860 SF 27.08.2001 | S.C | M.B.B.S. | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |
| 06. | M. சுவர்ணா, 2001 F 04802 SF 19.04.2001 | B.C | M.B.B.S. | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 31 | –– |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 07. | K. சுதா, 2000 F 05414 SF 08.06.2000 | B.C | M.B.B.S. | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | -- |

மேற்படி பட்டியலில் வரிசை எண்.6ல் உள்ள டாக்டர் M.சுவர்ணா அவர்கள் மேற்படிப்பு, தற்போது பயிலுவதால் வருகின்ற பிப்பரவரி 2008ம் ஆண்டில் பணியில் சேர்வதாக கடிதம் கொடுத்துள்ளார்கள். வரிசை எண்.7ல் உள்ள டாக்டர் K.சுதா அவர்களின் தகப்பனார் தன்மகள் மேற்படிப்பு படிதது வருகிறார் என்று கூறியுள்ளார்கள். மேலும் மருத்துவ அலுவலர் பதவி நிரப்பப்படும் பொழுது இரண்டு மருத்துவர்களின் பெயர் பரிசீலிக்கலாம்.

மேற்படி பட்டியலில் வரிசை எண்.2 மற்றும் வரிசை எண்.3ல் உள்ள நபர்கள் முறையே டாக்டர் B. ஆஷாலதா மற்றும் டாக்டர் அகிலா நடராஜன் ஆகிய இருவர் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி 35 வயது கடந்துள்ள போதிலும் அரசாணை எண்.98, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 17.7.2006ன்படி வயது வரம்பு மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டித்து தளர்வாணை வழங்கியுள்ளதால் இவர்களுக்கு வயது வரம்பு பொருந்தாது. தற்போது பணி நியமன ஆணை வழங்கப்படவுள்ள நபர்களின் விவரம்.

| வ. எண் | மருத்துவர் பெயர் மற்றும்வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பதிவு எண். | இனம் | படிப்பு | தாய்மொழி தமிழ்மொழி கல்வி தேர்ச்சி விவரம் | தற்போது வயது | தேர்ந் தெடுக்கப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | M. பாத்திமா, 2000 F 01862 SF 18.02.2000 | B.C | M.B.B.S. D.C.H. | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |
| 02. | B. ஆஷாலதா, 2000 F 03089 SF 28.03.2000 | S.C | M.B.B.S. Diploma Diabetalogy | இந்தி | 36 | ஆம் |
| 03. | அகிலா நடராஜன், 2000 F 03072 SF 27.3.2000 | B.C | M.B.B.S. D.G.O. | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 36 | ஆம் |
| 04. | A. ரஞ்சினிகுமாரி, 2000 F 09694 SF 29.8.2000 | M.B.C | M.B.B.S. D.G.O. | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |
| 05. | N. சியாமளா, 2001 F 10860 SF 27.08.2001 | S.C | M.B.B.S. | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |

எனவே, சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்போது காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களில் மேற்படி திருத்தப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள 5 நபர்களுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக மருத்துவ அலுவலராக ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதம் மற்ற இதர படிகளுடன் 13.11.2007 தேதியிட்ட ஆணையாளரின் செயல்முறை ஆணையின்படி பணியமர்த்தப்பட்டனர். மேலும், பணி விதிகளின் படி உரியவரின் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி மற்றும் மருத்துவ தொகுப்பில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும், வரிசை எண்.2ல் உள்ள ஆஷாலதா என்பவர் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாததால் அவரது தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் பணி நியமனம் செய்யப்பட்டனர். இந்நிகழ்விற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்